விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 27 வெள்ளிக்கிழமை (12.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268

## கரும்புலிகளின் சடலங்கள் நேற்று ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கே வவுனியா மற்றும் வெலிஓயா பகுதிகளில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் கொல்லப்பட்டு, இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் 14 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் நேற்று கையளிக்கப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

வவுனியா இராணுவ கூட்டுப்படைத் தலைமைத் தளத்தின் (12ஆம் பக்கம் பார்க்க)

## மொனராகலை காட்டுப்பகுதியில் ஏழு பேரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

மொனராகலை, கொட்டியாகல காட்டுப் பகுதியிலிருந்து அடையாளம் காணப்படாத நிலையிலான ஏழு சடலங்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் பொது மக்கள் சிலர் வழங்கிய தகவலை அடுத்தே குறித்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமாகிய ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

கொட்டியாகல எத்திமலைக் காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற பொதுமக்கள் சிலர் குறித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிரக்டர் ரக வாகனமொன்றில் இரு சடலங்களைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

தகவலை அடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸாரும் விஷேட அதிரடிப்படையினரும் மேற்கொண்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி மன்னாருக்கு விஜயம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா நேற்று மன்னாருக்கு சென்று படைத் தளபதிகளைச் சந்தித்து ஆக்கிரமிப்பு போர் நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராய்ந்திருக்கின்றார்.

நேற்று காலை மன்னாரிலுள்ள படைத் தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பில் வன்னி தளபதி ஜகத் ஜயசூரிய உட்பட பிரிகேட்களின் தளபதிகள், படைப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-5)

# தமிழ் மக்களை கைவிட்டுச் செல்லும் தொண்டு நிறுவனங்களின் செயற்பாடு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பயன்படுத்தி மக்களை இடம்பெயரச் செய்து மரங்களுக்குக் கீழ் வாழும் அவல நிலையில் மனிதாபிமானப் பணியாளர்கள் கைவிட்டுச் செல்வார்களாயின் அம் மக்களின் நிலை என்ன என்பதை தொண்டு நிறுவனங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒப்பந்தம் ஒன்றுடன் வந்துவிட்டு இடை நடுவில் தமிழ் மக்களை கைவிட்டுச் சென்றால் அதனை ஒரு பொறுப்பற்ற செயலாகவே கருதவேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.** (12ஆம் பக்கம் பார்க்க)

## கிரானில் கிளைமோர் தாக்குதல் நான்கு அதிரடிப்படையினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் பிரதேசத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது,

கிரான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கூழாவடி சிறப்பு அதிரடிப்படை முகாமிலிருந்து சுற்றுக்காவல் நடவடிக்கைக்காக சிறப்பு அதிரடிப்படையினர் சென்று கொண்டிருந்தனர்.

இவர்கள் மீது நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் கிளிபாய்ந்தகல் பாலமருகே விடுதலைப் புலிகள் கிளைமோர்த் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# புலிகளின் விமானத் தாக்குதலையடுத்து கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

## விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தயார் நிலையில்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல்கள் அண்மைக்காலமாக தீவிரமடைந்ததையடுத்து ஜனாதிபதி செயலகம், நாடாளுமன்றக் கட்டம் உட்பட கொழும்பில் உள்ள முக்கிய நிலைகள் மீது பொருத்தப்பட்டிருந்த விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மீளச் சரி பார்க்கப்பட்டு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி செயலகம், நாடாளுமன்றக் கட்டடம் உட்பட கொழும்பிலுள்ள முக்கியமான நிலைகள் மீது பொருத்தப்பட்டிருந்த விமான எதிர்ப்பு ஏவுகணைக் கருவிகள் கடந்த இரண்டு நாட்களாக் மீளவும் சரிபார்க்கப்பட்டு மேலதிகமான பாதுகாப்பு கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த படை முகாம்மீதான புலிகளின் தாக்குதலின் பின்னர் படைத்தரப்பு வான் எல்லைப் பாது (12ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்றுக் காலை குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் மீசாலை தெற்கு மீசாலையைச் சேர்ந்த தம்பிராஜா முரளிதாஸ் (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி காயமடைந்த இவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். (ச-5)

## யுத்தம் நடைபெறும் இடங்களில் வெளிநாட்டுப் படையினர் இல்லை

### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் யுத்த நடவடிக்கைகளில் இந்தியப் படையினரோ, வெளிநாட்டுப் படையினரோ சம்பந்தப்படவில்லை ஏனினும் தேசிய பாதுகாப்பினை கருத்தில் கொண்டு அயல் நாடான இந்தியா அதிநவீன ராடர் கருவியை வழங்கியமையை இட்டு இந்தியாவுக்கு அரசாங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்சன (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களை காப்பாற்றக் கோரி நெதர்லாந்தில் கவனயீர்ப்புப் போராட்டம்

(கேக்)

வன்னி மக்களின் அவலநிலையினை வெளிப்படுத்துவதற்காக நெதர்லாந்து நாட்டில் கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

த கேக் நகரத்தில் உள்ள நாடாளுமன்றத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வினை நெதர்லாந்து தமிழ்ப் பெண்கள் அமைப்பு ஏற்பாடு செய்தது.

அரச படையினரின் தாக்குதலினால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து எதுவித ஆறுதலுமின்றி தவிக்கும் எம் தமிழ் உறவுகளைக் காப்பாற்றுமாறு கோரி இக்கவனயீர்ப்பு ஒன்றுகூடல் தமிழ்ப் பெண்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ் உறவுகள் தாயக மண்ணை விட்டு அகதிகளாக்கப்பட்ட காட்சி ஆவணப்படங்கள், அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் ஐக்கிய நாடுகள் (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



பாரதி விழாவை முன்னிட்டு நேற்று நல்லூர் பருத்தித்துறை வீதியிலுள்ள பாரதி சிலைக்கு யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் துணை அதிபர் திருமதி எமில் வர்ணோதினி மலர்மாலை அணிவிப்பதையும் முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன் உட்பட மாணவர்களைப் படங்களில் காணலாம்.

## நாதஸ்வர வித்துவான் கானமூர்த்தி காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பிரபல நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் வி.கே.கானமூர்த்தி நேற்று முன்தினம் இரவு 11 மணிக்குக் காலமானார்.

இவர் இறக்கும்போது வயது 65 ஆகும். கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இவர் தனது 15 வயதில் இருந்து நாதஸ்வர வாத்தியத் துறையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சுவிஸ்சர்லாந்து உட்பட பல நாடுகளுக்குச் சென்று தனது நாதஸ்வர இசையின் மூலம் திறமைகளை வெளிக்காட்டியிருந்தார். (ச-5)

## தாக்குதல் நடத்திய புலிகள் வவுனியாவில் தங்கியிருந்தனர்

(கொழும்பு)

வவுனியா கூட்டுப் படைத் தலைமையகம் மீது தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகளின் கரும்புலி உறுப்பினர்கள் வன்னிப் பாதுகாப்புத் தலைமையகத்திற்கு எல்லைப்புறமாக அமைந்துள்ள தமிழ்க் கிராமம் ஒன்றில் இரண்டு தினங்களாகத் தங்கியிருந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமனலங்குளம் என்ற தமிழ்க் கிராமம் ஒன்றில் மக்களைப் போன்று குறித்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் தங்கியிருந்தே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த வீட்டில் வசித்த மக்களை வெளியேற்றிவிட்டுத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீட்டில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. வன்னியிலுள்ள விடுதலைப்புலித் தலைவர்களுடன் செய்மதித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தொடர்புகளை மேற்கொண்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது.

ஆசிகுளம், சமனலங்குளம் மற்றும் கோமரசன்குளம் போன்ற தமிழ்க் கிராமங்களில் பதுங்கியிருந்தே இந்தத் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ச-5)

# புலிகளின் தாக்குதலில் படுகாயமடைந்த இந். தொழில்நுட்பவியலாளர்களுக்கு கொழும்பில் சிகிச்சை அளிக்கப்படுகிறது

(கொழும்பு)

வவுனியாவிலுள்ள வன்னிப் பிராந்திய கூட்டு நடவடிக்கைகளுக்கான தலைமையகத்தின் மீது கடந்த 9 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய மும்முனைத் தாக்குதலில் காயமடைந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட இரண்டு இந்திய தொழில் நுட்பவியலாளர்களும் தொடர்ந்தும் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச வான் படையின் ராடர் பிரிவில் பணிபுரிந்த இந்த இருவரும் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் காயமடைந்து உடனடியாகவே கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இருந்தபோதிலும் வவுனியா முகாமில் வெளிநாட்டவர்கள் எவரும் பணிபுரியவில்லை என அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலைமைகளைக் கையாள்வதற்கு எம்மிடம் போதியளவு ஆட்கள் உள்ளார்கள். வெளிநாட்டவர்கள் எமது படைகளுடன் இணைந்து பணியாற்றுகின்றார்கள் எனக் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

காயமடைந்த 2 இந்திய தொழில்நுட்ப நிபுணர்களான ஏ.கே.தாகூர், சிந்தாமணி ராவுட் ஆகிய இருவரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து வவுனியா முகாமில் வைக்கப்பட்டுள்ள இந்திய ராடர் சாதனத்தைப் பராமரிப்பதற்காகவும் அதன் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் வந்து தங்கியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

2005 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தினால் இந்த ராடர் சாதனம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கடந்த 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விடுதலைப் புலிகள் தமது முதலாவது வான் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து இதன் தரம் மேம்படுத்தப்பட்டது. இதற்கான உதவிகளையும் இந்தியாவே வழங்கியது.

வவுனியா முகாமில் இந்திய தொழில் நுட்ப நிபுணர்கள் பணியாற்றியதை ஏற்றுக் கொள்ளும் இந்திய தூதரக அதிகாரி ஒருவர், காயமடைந்த இருவரும் தொழில் நுட்ப நிபுணர்களாகப் பணி புரிந்தவர்கள். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இந்த ராடர் சாதனத்தைப் பராமரிப்பதற்காக இவர்கள் காலத்திற்குக் காலம் கிரமமான முறையில் இலங்கைக்கு வந்து செல்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

காயமடைந்த இருவரும் தீவிரமான மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். வன்னிக் கூட்டுப் படைத் தலைமையகத்தின் மீது விடுதலைப்புலிகளின் தரை மற்றும் வான் வழியாகத் தொடுத்த கடுமையான தாக்குதலில் படையினர் குறைந்த பட்சம் 13 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-5)

# அரசியல் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு; பயங்கரவாதத்திற்கே இராணுவத் தீர்வு

## றோகித போகொல்லாகம தெரிவிப்பு

இலங்கை அரசாங்கம் அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினையே காண முற்படுவதாகவும் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு மாத்திரமே இராணுவ வழிமுறைகளைக் கையாள்வதாகவும் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். இந்தியாவின் 'த ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சமாதானத்தை அடைவதற்கான ஒரே வழிமுறை ஜனநாயகமே. அதனை அடைவதற்கு பயங்கரவாதம் அழித்தொழிக்கப்பட வேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தது. ஆனால் விடுதலைப் புலிகளே அதில் இருந்து விலகி வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்தனர்.

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தியதன் மூலம் இன ரீதியாக கலந்து வாழும் மக்களை அரசியல் ரீதியாக வலுப்படுத்தியுள்ளது. இது ஒரு பாரிய அடைவு. இதன் தொடரில் தற்போது கிழக்கை பொருளாதார ரீதியாகக் கட்டி எழுப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கிலுள்ள மக்கள் எந்தவொரு பயங்கரவாதக் குழுவினாலும் அடக்கு முறைக்குள்ளாக்கப்பட நாம் அனுமதிக்க மாட்டோம். அங்கு வாழும் மக்களை முதலில் அரசியல் ரீதியாகவும் பின்னர் பொருளாதார ரீதியாகவும் வலுப்படுத்த விரும்புகின்றோம்.

அவர்கள் தமது சொந்த எதிர்பார்ப்புக்களுடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்கான வாய்ப்பினையே நாம் ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு நிலைமைகள் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அவர், அங்குள்ள மனிதாபிமான நிலைவரங்கள் குறித்துத் தாம் தினமும் கவனமாக ஆராய்ந்து வருவதாகவும் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார். (ச-5)

## மணவாளக் கோல விஞ்ஞாபனம்

அளவெட்டி தெற்கு அடுவம்பற்று சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மணவாளக் கோலம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

விநாயகப் பெருமானுக்குக் காலை 9 மணிக்கு அஷ்டோத்தர (108) சங்காபிஷேகமும் பிற்பகல் விசேட பூஜையும் திருவூஞ்சலும் உள் வீதி. வெளி வீதி உலாவும் இடம் பெறும். (ச-3)

## கலந்துரையாடல்

யாழ் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

# வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரிக்கை

## அதிபர்கள் கல்வி அமைச்சுக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனின் இடமாற்றத்தினை இரத்துச் செய்யுமாறு தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக 29 அதிபர்கள் கையொப்பம் இட்டு வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மேற்படி வலயக் கல்விப் பணிப்பாளர் எமது வலயத்திற்கு 2005 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டு வலயத்தினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள அதிகமான பாடசாலைகள் இடம்பெயர்ந்த பாடசாலைகளாகவும் அவற்றின் பௌதிக வளங்கள் முற்றாகவோ அல்லது பகுதிகளாகவோ அழிவடைந்த நிலையில் இருந்தன.

இவரது காலத்தில் அரச அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து பெருந்தொகைப் பணத்தினைப் பெற்றுப் பாடசாலைகளின் பௌதிக வளத் தேவைகளைப் பெருமளவு பூரணப்படுத்தியுள்ளார்.

அத்துடன் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வுகளையும் அதிகமாக நடாத்தி வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சிக்கு வழிகோலியவர் என்ற பெருமைக்குரியவர்.

இவரால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் பலாபலங்கள் முழுமையாகக் கிடைக்க இருக்கின்ற வேளையில் அவருக்கான இடமாற்றம் எமக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே எமது கோட்டப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்றி வருகின்ற எமது வலயக் கல்விப் பணிப்பாளரது இடமாற்றத்தினை இரத்துச் செய்து தொடர்ந்தும் வலிகாமம் வலயத்தில் கடமையாற்ற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ச)

புலவர்மணி, பண்டிதர்

**கதிரேசு மயில்வாகனனார்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கான

**அழைப்பு**

அன்புடையீர்,

2008.09.12 (சர்வதாரி ஆண்டு ஆவணி 27 ஆம் நாள்) இன்று வெள்ளிக்கிழமை புலவர் மனையான 'வேல்வாசம்' வட்டுக்கோட்டையில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறும்.

'குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாய்ச் சுற்றும் உலகு'

என உலகஞ்சூழ வாழ்ந்த புலவரின் நிலைத்த வாழ்வு வேண்டி நாம் துதி செய்யும் பிரார்த்தனையிலும் மதிய விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அச்சுற்றமாய உற்றார், உறவினர், அறிஞர், தமிழ் ஆர்வலர், அன்பர் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

(தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

வணக்கம்

'வேல்வாசம்'
வட்டுக்கோட்டை

தருநர் :- புலவர்மணியின் குடும்பத்தினர்

(1667)

# இன்று ஒரு தகவல்

## மண்பானை மகத்துவம்

"எங்க அம்மா ஒரு மண்குடம் வாங்கிக்கொடுத்தார்! அதை எடுத்துக்கொண்டு போய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவர் அதை ஒரு பொன்குடமாக மாற்றிவிட்டார்!" என்றார் ஒருவர்.

"எப்படி அது?" என்று கேட்டேன். "ஒன்றுமில்லை! கீழே போட்டு உடைத்துவிட்டார்!" என்றார்.

"அப்படியானால், அது எப்படி பொன்குடமாக மாறும்?" என்றேன்.

"நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம்! மருமகள் உடைத்தால் பொன்குடம்! என்று. இது மருமகள் உடைத்தது. அதுதான் பொன்குடம்!" என்று விளக்கம் சொன்னார் அவர்.

மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட இந்தக் காலத்தில் மண்குடம்–பொன்குடம் மாதிரித்தான். மண்பானையில் அவ்வளவு மகத்துவம் இருக்கிறது.

தண்ணீரை சுத்தமாக்கி குடிப்பதற்கு இப்பொழுது பல பேர் "வோட்டர் பில்டர்" உபயோகப்படுத்துகிறார்கள். அதே மாதிரி தண்ணீரைக் குளிர்ச்சியாக வைக்க பிரிட்ஜ் உபயோகப்படுத்துகிறார்கள்.

இந்த இரு செயல்களையும் செலவே இல்லாமல் செய்து கொடுப்பதுதான் மண்பானை! உலோகப்பாத்திரங்களில் நீர் ஊற்றி வைத்திருந்தால் அதில் கிருமிகள் அதிகமாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் மண்பானையில் நீர் ஊற்றிவைத்தால் அப்படி ஆவதில்லை. நீரிலுள்ள கிருமிகளை யெல்லாம் உறிஞ்சி விடுவதால் குடிநீர் சுத்தமாகி விடுகிறது.

அந்தக் காலத்திலேயே நமது முன்னோர்கள் இதை நன்றாக புரிந்து வைத்திருந்தார்கள். மண்பானை என்பது ஒரு தலைசிறந்த "வோட்டர் பில்டர்" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஐதராபாத்தில் உள்ள உணவு ஆராய்ச்சிக்கழகம் இதைக் கண்டுபிடித்திருக்கிறது. இதற்குப் பின்பும் நாம் சும்மா இருக்கலாமா? உடனே போய் ஒரு மண்பானை வாங்கிக் கொண்டு வந்து விட வேண்டியது தானே!

முதலில் பானையை எடுத்துத் தட்டிப்பாருங்கள்! வெங்கலப் பாத்திரத்தை தட்டுவது மாதிரி சத்தம் கேட்டால் அது நல்லபானை.

பானைக்கு வெளிப்பக்கம் கறுப்புத்திட்டாக தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். பானை நன்றாக வெந்திருக்கிறது என்று அர்த்தம். வேறு ஒன்றுமில்லை. சிலது சாம்பல் பூத்து, சொரசொரப்பாக இருக்கும். அது வேண்டாம். வெளிப்பக்கத்தில் இருப்பதைப் போன்று உள்பக்கமும் கறுப்புத் திட்டு இருந்தால் அதை வாங்க வேண்டாம். கொஞ்ச நாளில் உடைந்து விடும்.

புதுப் பானையில் தண்ணீரை ஊற்றியவுடன் "உஸ்" என்ற சத்தம் கேட்கும். பானையில் களிமண்ணுடன் கலந்திருக்கும் மணல், நீரை உறிஞ்சும் சத்தம்தான் அது. பானைக்கு வெளிப்பக்கமோ, உள்பக்கமோ சீமெந்து பூசியிருந்தால் வேண்டாம். அதனால் உஷ்ண காற்று உள்ளேயே தங்கி விடும் தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது.

என்னதான் இருந்தாலும் செலவில்லாமல் கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் மண் பானைத் தண்ணீருக்கு ஈடு எதுவுமில்லை உடனடியாக உண்மையாக தாகத்தை தணிப்பது அது தான்!

ஒரு பெரிய சங்கீத வித்துவான் கடம் வாசிப்பவர் ஒரு கச்சேரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அதற்கு முதல் மனைவியைக் கூப்பிட்டு "உன்கையால் 'ஜில்'என்று தண்ணி கொண்டுவந்துகொடு குடித்து விட்டுப் போகிறேன்" என்றார்.

அந்தஅம்மாவும் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிக் குடித்தார், வெயிலுக்கு இதமாக இருந்தது.

"ஆகா!மண் பானைத்தண்ணியா? கால மறிந்து நடயதில் உன்னைஎவரும் மிஞ்ச முடியாது! ரொம்ப தாங்ஸ்" என்றார்.

"உங்களுக்குத்தான் தாங்ஸ் சொல்ல வேண்டும்" என்றார்அந்த அம்மா.

"ஏன்?" என்றுகேட்டார் இவர்.

"நேற்று இன்று ஒருதகவல் கேட்டேன் இன்றைக்கு நம் வீட்டில் மண் பானையாக உபயோகப்படுத்துவதே உங்கள் 'கடம்' தான்!ரொம்ப தாங்ஸ்" என்றாராம் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிராம அலுவலர் வெற்றிடங்கள் நிரப்புவதற்காக மேலுமொரு தொகுதியினருக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகநடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மற்றுமொரு தொகுதிப் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ். மாவட்ட செயலகத்தில் இம்மாதம் 25, 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்ததாகவும். தவிர்க்கமுடியாத காரணத்தால் இந் நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாகவும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அவர்களின் தனிப்பட்ட விலா சங்களுக்குதபாலில் அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாகவும் யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு.

**நெடுந்தீவுபிரதேச செயலர் பிரிவு**

ஜி.ஜெனி–அத்தியடி, சி.மாலினி–மண்கும்பான்.

**நல்லூர்பிரதேசசெயலர்பிரிவு**

வி.குலதுங்கன்–திருநெல்வேலி வடக்கு, வி. அருள்விந்தன் – அரியாலை மேற்கு, ஜி அரவிந்தன் – வண்ணார் பண்ணை, ஏ.விஜிதா– வண்ணார்பண்ணை , எஸ். கே. தினேஷ்குமார்- அம்பலகம் கோப்பாய், ஜே.லினேஷ்–நல்லூர்வடக்கு, ஆர் . பவித்தரா–திருநெல்வேலி வடக்கு, வை.சுகன்பாபு –மூத்த விநாயகர் வீதி நல்லூர் , எஸ்.விஜிதன்–செம்மணிவீதி நல்லூர் , எஸ். சசிகேசன்–கோண்டாவில் வடக்கு, என்.ரேணுகா–செபஸ்ரியன் வீதி ஓட்டுமடம், ரி.தவேந்திரன்–அரியாலை , எஸ். விணோஜிதா –கோண்டாவில் வடக்கு, என்.லோக தர்சன்– கோண்டாவில் வடக்கு, பி. தங்கத்துரை–யாழ்ப்பாணம், எம்.செந்தூரன்–கொக்குவில்கிழக்கு,ஏ.கே. ஜானகா- நல்லூர் , எம். ஜானேந்திரன் –கொக்குவில்.

**சங்கானை பிரதேச செயலர் பிரிவு**

ரி. சுபேஷ்–சங்கானை, கே.கோகுலன்- சுளிபுரம்மேற்கு, ஆர். தட்சாயணி- பொன்னாலை மேற்கு, பி.பிரதீபா–தொல்புரம், எம். உமாலினி–நாவற்குளி தெற்கு, வி.எஸ். அசோக ரட்ணம்–மூளாய், எஸ்.குமுதினி- பண்ணாகம் தெற்கு, என். சிவரூபன் –சுளிபுரம் மத்தி, ஆர். ஜெயமாலினி–அராலி தெற்கு, எஸ்.சிவகுமார் –மூளாய்தெற்கு, எம்.மயூதரன்- சுளிபுரம் கிழக்கு

**தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு**

எஸ். சுபாகர்- திருகோணமலை, என்.கிருஷாந்தினி–சண்டிலிப்பாய், பி.மரின் பெனிற்றா- இளவாலை, பி.ஜனகன்–உடுவில், எம்.கலைவிற்-பண்டத்தரிப்பு, எஸ்.ரட்ணகுமாரி- சங்கானை வடக்கு. ஜெ. தவகுமார் –கோப்பாய்சந்தி , ஆர். வரதராஜன்–மாதகல் வடக்கு , எஸ். சந்திரமதி–நவாலி தெற்கு, எஸ். ரி. கஜேந்திரன்- தாவடி கிழக்கு ,கே. பிரதீபா –நவாலி கிழக்கு , எஸ்.வை. ரதீபன் – வசாவிளான்,ஆர்.சுரேணுகா– ஆனைக்கோட்டை, ஏ. அருள்–ஜீவரட்ணம்– ஊரணி, யு. காயத் திரி – சுதுமலை மத்தி., வி.யோக மலர்– சுதுமலை தெற்கு, என்.ரூபலக்கி– மானிப்பாய், பி.வித்தியரூபி- சண்டிலிப்பாய், எஸ். செல்வேந்திரன்– தாவடி தெற்கு , எஸ். தவனேசமலர்– அளவெட்டி மத்தி, ரி. நாகசுபாதினி – இளவாலை , எஸ். சக்திவேல்– சில்லாலைமேற்கு.

ரி.மோகனகுமார்–ஆணைக் கோட்டை மேற்கு, வி. ஜெயமாறன்– கோப்பாய் தெற்கு,பி.ரஜிதா–அளவெட்டி, ரி. சசிகா- இளவாலை, ரி.ரதிகரன்–இளவாலை, ஏ.நிஷாந்தன்–உரும்பிராய்கிழக்கு, ஏ.டி. ஷைலஜா- வசாவிளான் கிழக்கு, பி.பாலேந்திரன்–தெல்லிப்பளை கிழக்கு, வி.பிரதீபன்–மையிலிட்டி வடக்கு, வி.சஞ்சீபன்- ஏழாலை தெற்கு, ஜி.ஜொய்சி–உடுவில்,கே. துவாரகன்–அளவெட்டிதெற்கு, எஸ்.கிருஷ்ணசாந்தி அளவெட்டி கிழக்கு, பி.பகீரதி- அளவெட்டி தெற்கு, எஸ். செல்வரோகினி- தெல்லிப்பளைகிழக்கு, எஸ். சிவானந்தன்- அளவெட்டி வடக்கு, பி.தீபன் – காங்கேசன்துறை , என்.ஜெயவிந்தன் –தெல்லிப்பளை கிழக்கு, கே. மஞ்சுவாஷினி–மல்லாகம், என். உமாகாந்தா- அளவெட்டி கிழக்கு, எம்.விஜிதா – மல்லாகம், ஆர்.விஜய் –இணுவில்கிழக்கு, எஸ்.சுமந்திரன்–உடுவில், எப். அன்ரனி- ஊறணி, எஸ் ரேகா- மானிப்பாய்.

எஸ். ஜீவகுமாரன்- கோண்டாவில் மேற்கு , எஸ். அனுராதன்– தெல்லிப்பளைகிழக்கு , ஜி.ஜி. அஜந்தா–அளவெட்டி மத்தி ,ஐ.இராகுலன்–கட்டுவன்மேற்கு, ரி. லதாங்கி அளவெட்டி வடக்கு. எஸ். சயூரிகா– சுன்னாகம்,எம்.ஜெயந்தினி – மயிலிட்டிவடக்கு. எஸ். நிஷாந்தன்– தாவடி தெற்கு.ஜே. சசிகலா- மல்லாகம், எஸ். தேனுஷா- தெல்லிப்பளை,கே.புருசோத்தமன்–தெல்லிப்பளைகிழக்கு ,ஏ.ஆர். ஜெசிந்தா– அளவெட்டிகிழக்கு, எஸ். சாரங்கன்– அளவெட்டிவடக்கு, கே. அஜந்தன்- பன்னாலை, ஏ. சித்திரா–கிளிநொச்சி.

**கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவு**

வை. சசிகாந்தன்- கொழும்பு, என். ஸ்ரீகுமார்–சங்கானை , எஸ்.சத்தியபாலன்–நீராவியடி, எஸ். தனுஜா– கரவெட்டி, கே. சந்திரமோகன்– உடுப்பிட்டி, என். சிவதர்சன்–கரணவாய் கிழக்கு ,எஸ். துசீதன்- கரவெட்டி வடக்கு, பி.லலித்–கரவெட்டிக் கிழக்கு, கே. பிரசாந்தன்–நெல்லியடி , எம். வாசுதேவன்–கரணவாய் மேற்கு, கே. பிரேந்திரா- கரவெட்டி தெற்கு, எஸ். தயாளன்–கரவெட்டி, கே. ஜெனத்மேனன்–கரணவாய் வட மேற்கு, எஸ்.பாரதிராஜ்–கரணவாய், எஸ்.கரிகரன்- உடுப்பிட்டி, பி.சுதர்தன்–உடுப்பிட்டி, எஸ். இராஜ சுதன்– கரணவாய், கே.மகேந்தன்–துன்னாலை மேற்கு. (ஓ)

## இராசி பலன்

*12.09.2008*
*(ஆவணி 27, வெள்ளிக்கிழமை*
*திருவோணம் முன்னிரவு 10.10 மணிவரை*
*துவாதசி பிற்பகல் 3.01 மணிவரை*
*இராகுகாலம்–10.33–12.03 மணிவரை*
*சுபநேரம்–06.03–07.33 மணிவரை*
*பிரதோஷ விரதம், ஆவணி ஓணம்*

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, காரிய நன்மை, சுபநிகழ்வு, தூர தேசச்செய்தி. |
| இடபம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, அச்சமான நிலை, புதிய திட்டமிடல். |
| மிதுனம் | ஆரோக்கியக்குறைவு, வீண் பகை, முயற்சி தடங்கல், போசன சுகம். |
| கடகம் | தெய்வதரிசனம், அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், காரிய அனுகூலம். |
| சிங்கம் | சுகவாழ்வு, திடீர்பயணம், பண வருவாய், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம், குடும்பக்கவலை, வீண்செலவு. |
| துலாம் | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், ரோகநிலை, காரியதாமதம். |
| விருச்சிகம் | வாக்குமேன்மை, அன்னியர் சந்திப்பு, பொருள்சேர்க்கை, தெய்வதரிசனம். |
| தனுசு | பணக்குறைவு, தொழில் மந்த நிலை, மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம். |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், பெரியோர் சந்திப்பு, தெய்வதரிசனம. |
| கும்பம் | பிதாசிந்தை, கோபப்படுதல், பணவிரயம், திடீர்பயணம். |
| மீனம் | தெய்வதரிசனம், தொழில் நன்மை, மனமகிழ்ச்சி. |

வளவன்

# சந்தேக நபரை 90 நாட்களுக்கு மேல் தடுத்து வைத்திருக்க முடியுமா?

## உயர் நீதிமன்றம் ஆராய்வு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை



90 நாட்களுக்குமேல் தடுத்து வைத்திருக்க முடியுமா? என்பது குறித்து ஆராய்வதற்கு உயர் நீதி மன்றம் தீர்மானித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கக்கூடிய காலம் தொடர்பில் மனுதாரர் திஸ்ஸநாயகத்தின் சட்டத்தரணி மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு சட்டத்தரணி ஆகியோரிடம் எதிர்வரும் 15ஆம் திகதி எழுத்து மூலமான விளக்கம் அளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது:

அசோக டி சில்வா, ஜகத் பாலபட்ட பெந்தி மற்றும் கே.ஸ்ரீபவன் ஆகிய மூவரடங்கிய நீதிவான் குழு இந்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினால் தடுத்துவைத்து விசாரிக்கப்பட்டுவருகின்றார்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள காலம் 90 நாட்கள் கடந்துள்ளதாகவும் இதன் காரணமாக அடிப்படை உரிமை மீறல் இடம்பெற்றுள்ளதாக ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்தின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய அவசர கால சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்பட்ட ஒருவரை சுமார் ஒன்றரை வருடகாலம் வரை தடுத்து வைத்திருக்க முடியும் என பயங்கரவாத தடுப்புப் பிரிவு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (அ–6)

## ஆன்மீக யாத்திரை

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் யோகாசன, தியானப்பயிற்சி பெற்ற, பெற்றுக் கொண்டிருக்கின்ற யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட, கலைப்பீட, மருத்துவபீட மாணவர்கள் மற்றும் தனிப்பட்டவர்களையும் இணைத்து இவ் ஆன்மீகச் சுற்றுலா நடைபெறவுள்ளது.

இப் பயணத்தின் போது கொழும்புத் துறை யோகர் சுவாமி சமாதி கோயில், கைதடி மார்க்கண்டு சுவாமி சமாதிகோயில், கைதடி மாதாஜி லிங்கேசுவரர் சாமதிகோயில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், செல்வச்சந்நிதி கோயில், வல்லிபுரம் ஆழ்வார் கோயில் ஆகிய இடங்களைத் தரிசனம் செய்து, நிரந்தர சமாதானத்திற்காகவும், உலக நன்மைக்காகவும், ஆன்மீகம் மேன்மையுறவும் குருவருளையும், திருவருளையும் வேண்டி அனைவரும் மனமொன்றித் தியானிக்கும் சந்தர்ப்பம் கைகூடியுள்ளது.

நாளை சனிக்கிழமை மானிப்பாய் வீதி, தாவடியிலுள்ள சமிதியிலிருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இப் புனித யாத்திரையில் யோகாசன மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி செயலாளர் கி.சிவமோகன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)




## திருமறைக்கலாமன்றம் வழங்கும் "அந்தமான்" நாட்டிய நாடகம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி வழங்கும் 'அந்தமான்' நாட்டிய நாடகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன பணிப்பாளர் இ.அ. திலகரட்ணம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

## பச்சை மரக்கறிக்கான கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவுக்கான பச்சை மரக்கறிக்குரிய கொடுப்பனவுகள் இதுவரை காலமும் யாழ் அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்பட்டு வந்தது. இந் நடைமுறை 1.9.2008 இல் இருந்து மாற்றப்பட்டு, இதற்கான கொடுப்பனவை மாகாணக் கல்வித் திணைக்களமே மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைய முதற்கட்டமாக வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு ரூபா 8 இலட்சத்து 84 ஆயிரத்து 568ஐ விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வி. இராசையா அறிவித்துள்ளார். (ஓ-19)

## பிராந்தியத் தலைவரின் உத்தியோக வருகையும், சேவைத்திட்ட முகாமும்

(ஊர்காவற்றுறை)

தீவக லயன்ஸ் கழகத்தின் பிராந்தியத் தலைவர் லயன் கே. கங்கைவேணியன் ஜே.பி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் உத்தியோகபூர்வ வருகையை மேற்கொள்ளவுள்ளார். இதேவேளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் வேலணை மத்திய கல்லூரியில் லயன்ஸ்கழகம், லயன் கே. கங்கைவேணியன் ஜே.பியின் அனுசரணையுடன் வேலணை புளியங்கூடல் மக்களுக்கான மாபெரும் சேவைத்திட்ட முகாமை நடத்தவுள்ளது.

நிகழ்வில் யாழ்.போதனா வைத்திய சாலை கலாநிதிகளால் கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் மற்றும் ஏனையோருக்குமான பொது மருத்துவ பரிசோதனை மற்றும் மருந்து வழங்கல், சலரோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும், சலரோக இரத்தப் பரிசோதனை மற்றும் சிறுநீர் பரிசோதனை, கண்பரிசோதனை, கண்ணாடி வழங்கல், மாணவர்களுக்கான பற் பரிசோதனை, பற்பசை, தூரிகை வழங்கல், தெரிவு செய்யப்பட்ட முதியோருக்கு புதிய உடை மற்றும் உணவு வழங்கல், முதியோர் இல்லம் தரிசித்தல், முதியோர் கௌரவிப்பு, புதிய உடை, உணவு மற்றும் உணவுப் பொருள் வ்ழங்கல், மரம் நடுகைத் திட்டம், மாற்று வலுவுள்ளோருக்கான உதவி வழங்கல், பசுக்கள், இடபங்கள் மற்றும் இயற்கை வள பாதுகாப்பு விழிப்புணர்வு நடவடிக்கை ஆகியன இடம் பெறும். (ஓ)

## — யாழ்ப்பாணக் கல்லூரி — தமிழ் மன்றத்தின் 'பாரதி விழா'

(வட்டுக்கோட்டை)



1982இல் மகாகவி பாரதியின் நூற்றாண்டு நிறைவு தின நாள் முதல் யாழ்ப் பாணக் கல்லூரி தமிழ்மன்றம் 'பாரதி விழா' நடாத்தி வருகின்றது.

இதன் பிரகாரம் இவ் வருடம்26 ஆவது தட வையாக இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு 'பாரதி விழா' சிறப்பாக நடாத்தப்பட உள்ளதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## உலகை வெற்றிகொள்ளும் சிறுவர்கள்

ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படும் சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் அழகியல் கல்விப் பிரிவும், வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து, அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான சித்திரம், பாடல்,பேச்சு,சிறுகதை, கட்டுரை, குறுநாடகப் போட்டிகள் ஆகியவற்றை நடாத்தவுள்ளன. இதன்பிரகாரம் அகில இலங்கை பாடசாலை மட்டத்திலான போட்டிகளில் "உலகை வெற்றி கொள்ளும் சிறுவர்கள்" என்ற தலைப்பில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அதிபர்களை கல்வி அமைச்சின் செயலாளர் சார்பில் மேலதிகச் செயலாளர் (கல்வி அபிவிருத்தி டபிள்யூ தர்மதாசவும், கல்வி அமைச்சின் கல்வி அமைப்பாளர் துஷாரா குணதிலக்காவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இப் போட்டிகள் பற்றிய விபரங்களை தத்தம் கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகளில் பார்வையிடலாம். (ஓ-19)



வடமாகாண பிரதம செயலாளர் கடந்த 27ஆம்திகதி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அதன் நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தையும் அதன் வசதிகளையும் பார்வையிடுவதையும், அருகில் கௌரவ செயலாளர் கல்க் விஸ்வநாதன், பொருளாளர் ஏ.கிருஸ்ணமூர்த்தி, தொழில் அதிகாரி எஸ்.தியாகலிங்கம், பணிப்பாளர் சபை உறுப்பினர் வி.ராஜ்குமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வ சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் "மயில் ஏறியசேவகன்" எனும்பொருளில்ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆன்மீக சொற்பொழிவு ஆற்றுவார். (ஓ-35)

## 1008 அஷ்டலக்சுமி மந்திரபூஜையும் திருவிளக்கு பூஜையும்

ஸ்ரீஅம்மா பத்மாவதியின் ஜென்மதின ஒரு மாதத்தை முன்னிட்டு 1008அஷ்டலக்சுமி மந்திர பூஜையும், திருவிளக்கு பூஜையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான பதிவுகளை நாளை சனிக்கிழமை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் மேற்கொள்ளலாம் எனவும் மேலதிக தகவலர்களை 021 222 2935 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது கொக்குவில் மேற்கு மணியர்பதி லேனில் உள்ள ஸ்ரீகல்கி ஆன்மீக மையத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு - ஸ்ரீகல்கி ஆன்மீக மையம்கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

## பூரணை விழா

கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதி மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பூரணை விழா அனுஷ்டிக்கப்படவுள்ளது.

விழாவில், பஜனை, ஆன்மீக உரை, அஷ்டோத்திர நாமார்ச்சனை, தீபாராதனை ஆகியன இடம்பெற உள்ளதாக கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## பசுப்பால் வழங்குதல்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தரம் 1 முதல் தரம் 5 வரை கல்வி பயிலும் 275 சிறார்களுக்கு பசுப்பால் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பரு. பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கால்நடை வைத்தியர் சி.வசீகரன் ஆகியோர் கலந்து நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (ஓ)

## பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்படும் தமிழில் முது கலைமாணி கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் இம் மாதம் 22 ஆம்திகதி திங்கட்கிழமையும், பொது நிர்வாகத்தில் முதுகலைமாணி கற்கை நெறிக்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் இம் மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமையும் ஆரம்பமாகவுள் ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேர சூசியினை பட்டப்பின் படிப்புகள் பீட, பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி அ.வே.மணிவாசகர் அறிவித்துள்ளார். (ஓ)

# யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானக் கலாசாரத்தை மேம்படுத்தும் புத்தாக்கக் கண்காட்சி

**கலாநிதி நா.சிவயோகன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

அறிமுகம்

ஒருநாட்டின் அபிவிருத்திக்கு புதிய கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு மிக அவசியமான தொன்றாகும். வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது புதியன கண்டுபிடித்தலும், அவற்றிற்கு பழக்கப்படுவதும் ஒவ்வோர் தேசத்தினதும் சமூக,பொருளாதார, கைத் தொழில் வளர்ச்சிக்கு துணைபுரிந்துள்ளதைக் காணலாம். ஆயினும் புதிய கருத்துக்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆர்வத்தோடு அல்லது பாராட்டுதலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று கூறமுடியாது. வரலாற்றின் பல சந்தர்ப்பங்களில் விஞ்ஞானத்தையும், தொழில்நுட்பத்தையும் தழுவிய பல புதிய கண்டுபிடிப்புக்கள் எவ்வித தயக்கமுமின்றி வெறுத்து ஒதுக்கப்பட்டதென்பதற்கும்,அத்தகைய புதிய கண்டுபிடிப்புக்கள் வேண்டுமென்றே மழுங்கடிக்கப்பட்டதென்பதற்கும் பல்வேறு உதாரணங்கள் உள்ளன. ஆனால் அதிர்ஷ்டவசமாக இன்று நிலைமை மாறியுள்ளது. அரசாங்கம், மற்றும் தனியார் துறை நிறுவனங் கள் புதிய கண்டுபிடிப்புக்களை ஆர்வத்துடன் அங்கீகரிப்பதோடு அவற்றைப் பயன்படுத்தவும், அத்தகைய கண்டுபிடிப்புக்களை மேம்படுத்துவதற்காகஉதவியளிக்கவும்முன்வருகின்றன.

எமது நாட்டிலும் அரசாங்கமானது, புத்தாக்குநர்களை இனங்கண்டு உற்சாகப் படுத்தவும், இலங்கையரின் நிர்மாணத் துறையை விருத்தி செய்வதற்கும் கட்டியெழுப்புவதற்கும் 1979 ஆம் ஆண்டில் 53ஆம் இலக்கப் பாராளுமன்ற சட்டத்தினால், கைத்தொழில் அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இயங்கக் கூடியவாறு இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவை அங்குரார்ப்பணம் செய்துவைத்தது.

இவ் ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கங்களாவன, புத்தாக்குநர்களை சட்ட ரீதியாக முன்கொண்டுவரல், எவ்வித வேறுபாடுமின்றி ஒவ்வோர் மனிதனையும் புத்தாக்குநராக மாற்றுவதற்கு துணைபுரிதல், புத்தாக்குநர்களை கௌரவப்படுத்தலும், விருதுகளைப் பெற்றுக்கொடுத்தலும், தேசிய புத்தாக்கங்களை வர்த்தக மயமாக்குவதற்கு பூரண ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல், புத்தாக்குநர்களின் ஆக்கங்களுக்கு புலமைச் சொத்து பாதுகாப்பினை பெற்றுக்கொடுத்தல் போன்றவையாகும்.

**ஆணைக்குழுவின் செயற்பாடுகள்**

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவானது ஒவ்வொரு வருடமும் கண்டுபிடிப்பாளருக்காக ஜனாதிபதி தேசிய விருதுப் போட்டிகளை நடாத்தி அவர்களுக்கு பணப் பரிசு, பதக்கம்,சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்குகிறது.இதன்மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற புத்தாக்குநர்களுக்கு ஆக்கவுரிமைப் பத்திரத்தினை பெற்றுக்கொடுப்பதுடன், அதனை நல்ல முறையில் உயர் மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கும்,சர்வதேச மடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் ஜனாதிபதி நிதியினால் நிதியுதவி பெற்றுக்கொடுக்கிறது. (தொடரும்)

# நோத் முதல் கோபல்லவா வரை (96)



### ஆள்பதி மக்கலம் காலத்துத் திருத்தம்


அவர் ஐரோப்பியரல்லாத பிற நாட்டினர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு அருகதை இல்லாதவர்கள் என்ற தடித்த எண்ணப் பாங்குள்ளவர். அவர் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்ற கருத்துடையவராயிருந்த போதிலும் கிளர்ச்சியாளர் கேட்ட கோரிக்கைகள் அனைத்தையும் கொடுக்க விரும்பவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் இலங்கையர் சட்டசபையில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும். ஆட்சி முறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று கேட்டார்களேயல்லாமல் சுதந்திரந் தருமாறு கேட்டார்கள் அல்லர். ஆட்சி முறையில் இலங்கையருக்கும் விசாலித்த உரிமையையே அவர்கள் கேட்டார்கள். E.W. பெரேரா என்னும் பெரியார் *"பிரித்தானியர் ஆட்சியில் நம்பிக்கையும் அதற்கு விசுவாசமும் பண்பாடும் பணிவும் உள்ள இலங்கையராய நல்ல மக்கள் கௌரவமான குடியுரிமையே கோருகிறார்கள். சுயாதீன அரசமைப்பு, முறையான சமூக சேவைகள், கடுமையான வரி நீக்கம், பரந்த முறையில் குடியேற்றம், குளங்கள் திருத்தப்படல். பரந்த கல்விமுறை, பகிரங்க சேவையில் பொது மக்கள் பங்கு, இன்னும் அத்தியாவசியம் வேண்டிய திருத்தங்கள் இவையே இப்போது இன்றியமையாது செய்யப்பட வேண்டியவை"* எனக் குறிப்பிட்டார்

சீர்திருத்தங்கோரி முன்னின்ற பெரியார்கள் நினைவேடுகள், விண்ணப்பங்கள், தீர்மானங்கள் என்பன எழுதியும்; பகிரங் கக் கூட்டங்கள் கூட்டியும் தமது கருத்தைத் தெரிவித்தார்கள். ஆள்பதிகளுடன் நேரில் கலந்துரையாடியும் தமது கருத்தைத் தெரிவித்தார்கள். இவற்றையெல்லாங் கேட்ட ஆள்பதி மக்கலம் அவர்கள் குடி யேற்ற மந்திரியார் குறூவ் அவர்களுக்கு "இவர்கள் கோருவது பிரதிநிதித்துவ அரசாங்கம் அல்ல. இவர்கள் கோரிக்கை நிறைவேற் றப்பட்டால் இலங்கையில் சில்லோராட்சியே நிலவ வழி அமைத்ததாகும்" என எழுதினார்.

இந்த அபிப்பி ராயமே முன்னர் வாட், றொபின்சன், அண் டர்சன் ஆகிய ஆள்பதிகளுக்கும் இருந் தது. அவர்கள் கருத்தின்படி ஆங்கிலேய ராய தாங்கள் இலங்கையில் இருந்தமை சுதேசிகளின் நன்மையைக் கண்கா ணிக் கவேயென்றும், தோட்ட முதலாளிக ளோ, ஆங்கிலம்

**மீன் பார்வை**



*விக்டோரியா மகாராணியின் வைரவிழா(1897): கண்டி மன்னனின் அதிகாரம் பிரித்தானியாவால் அகற்றப்பட்டதன் பின்னர் பிரித்தானிய அரசரே இலங்கைக்கும் அரசரானார். இந்த நாட்டின் அரசினை வெற்றிகொண்டதால் பிரித்தானிய அரசரே இலங்கை அரசர் என இந்நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. பாரம்பரிய உயர் குடியினர். புதியஉயர் குடியினர் அரச குடும்பத்தினரின் பிறந்தநாள், திருமணம், விசேட தினங்கள் மற்றும் முடி சூட்டு விழா போன்றவற்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தம்முடன் நெருக்கமாக உள்ளனர் என்பதை காண்பிக்கவே இங்ஙனம் செய்யப்பட்டது. பிரித்தானிய அரச பிரமுகர்கள் இலங்கைக்கு வருகை தரும்போது அவர்களை சம்பிரதாய பூர்வமாக வரவேற்பதில் உயர் குழாமினரிடையே போட்டி நிலவியது. அரச பாடசாலைகளிலும், மிஷனரி பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் பிரித்தானிய பேரரசுக்கு விசுவாசமாகவிருக்க பயிற்சி வழங்கப்பட்டது. பிரித்தானிய அரசுக்கு விசுவாசமாக இருப்பது கல்வியின் சிறப்பாக கருதப்பட்டது.* (W.L.SKEEN AND CO.1890)

ஆட்சிப்பொறுப்பு மேலிடத்தில் இருக்குமேயல்லாது பொது மக்களுக்கு நன்மை பயலாது என்பதே யாம். எனவே தான் போலும் 1833 ஆம் ஆண்டு தொடக்கம் 1910 ஆம் ஆண்டு வரையும் வியக்கத்தக்க ஒரு மாற்றமும் செய்யப்படாதிருந்தது.

சமூக அபிவிருத்தி கருதி ஆரம்பிக் கப்பட்ட விவசாயச் சங்கம், மதுவொழிப்புச் சங்கம், சமூக சீர்திருத்தச் சங்கம், இலங் கைத் தேசிய சங்கம், கரைநாட்டு விளை பொருட் சங்கம், தோட்டத்துரைமார் சங்கம் என்பனவாதிய இயக்கங்கள் திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தன. அன்றேல் மக்கள் திருத்தங்கோருமாறு ஊக்கமளித் தன.

ஆள்பதி மக்கலம் அவர்கள் குடியேற்ற மந்திரியார் குறூவ் அவர்களுக்கு எழுதியவற்றோடு இலங்கையில் 1907 ஆம் ஆண்டில் ஒரு நிதிக் குழுவையும் நியமித்தார். அதில் அங்கத்தவராய நியமன அங்கத்தவர்களுக்கு சட்ட நிறைவேற்று சபையின் å¦k ¾Âç ïïç á¥D, வரவு செலவு விபரங்களையும் அறியும் வாய்ப்பு ஏற்படலாயிற்று.

நிதிக்குழுவில் அனுமதிக் கப்பட்ட நியமன அங்கத்தவர்கள் அராபிய னின் கூடாரத்துள் ஒட்டகம்போல நுளைந்து நடக்கத் தலைப்பட்டனர் என லூடவைக் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

க.சி.குலரத்தினம்

படித்த இலங்கையரின் கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவித்தது ஏன் எனக் குடியேற்ற மந்திரியார் ஆள்பதி மக்கலத்தைக் கேட்ட போது, அவர் அதற்கு உத்தியோக அங்கத்தவர் பெரும்பான்மையினராய இருந்தாற்றான் பிரித்தானிய பேரரசு வாதம் நிலைக் கும் என எழுதினார். அன்றி இலங்கையர் தமது பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் அளவுக்குப் பக்குவம் அடையவில்லை யென்றும், அவ்வாறு அவர்கள் பக்குவம் அடையும்வரை இவர்களுக்குத் தெரிவு முறை தகாதென்றும், நியமன முறையே தகுதியானதென்றும் அவ்வாறு நியமிக்கும் பொறுப்பும் ஆள்பதியிடமே இருத்தல் வேண்டும் என்றும் எழுதினார். அவருக்கு உதவியாக அப்படியேயாகுக எனப் பக்கப் பாட்டுப் பாடிய பெரியார் கிளிபோட் என்ற பிரதம காரியதரிசியாவர். (தொடரும்)

# தொல்லியல் நோக்கில் (2)

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதன் நிலையாக ஓரிடத்தில் வாழாது நாடோடியாகத் திரிந்ததால் இக்காலம் பற்றிய ஆய்வு பெருமளவுக்கு கல்லாயுதங் களை அடிப்படையாகக் கொண்டு ஆராயப் படுகிறது. இதன் அடிப்படையில் இவை பழைய கற்காலம், நுண் கற்காலம், புதிய கற்காலம் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

பழைய கற்காலங் கூட கல்லாயுதங் களின் வடிவமைப்பு, தொழில் நுட்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இப் பின்னணியில் கந்தரோடையில் மேற் கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளையும், அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தையும் நோக்கலாம்.

பெருநிலப்பரப்பில் மாதோட்டத்தைப் போல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு காலப் பகுதிக்குரிய தொல்லியல் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடங்களில் கந்தரோடைக்குத் தனிச் சிறப்புண்டு. இவ்விடம் யாழ்ப்பாண நகருக்கு வட மேற்கே சுன்னாகம் வட்டாரத்தில் கடற்கரையில் இருந்து மேற்கே ஆறுமைல் தொலைவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 28-30 அடி உயரத்தில் அமைந்த இவ்விடம் 3.2 சதுரக் கிலோமீற்றர் பரப்புடையது. இதில் 2 கிலோமீற்றர் அளவில் தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது பெருங் குளங்களைக் கொண்டுள்ள இவ்விடத்தினூடாகப் பாயும் வழுக்கையாறு மழை காலத்தில் கந்தரோடையைக் கடலுடன் தொடர்புபடுத்துகிறது. கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவத்தை முதன் முதலில் வெளியுலகிற்கு வெளிப்படுத்திய பெருமை போல்பீரிஸ் என்பவரைச் சாரும். இவர் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கு மேற் கொண்ட தொல்லியல் மேலாய்வின் போது மட்பாண்டங்கள் நாணயங்கள், கட்டடச் சிற்பங்கள், பிறசான்றுகளைக் கண்டு பிடித்து கந்தரோடையை அநுராதபுர அர சின் சிறுநகர் என வருணித்து, சிங்கள மக்களின் மூதாதையினர் என நம்பப்படும் விஜயன் கூட்டத்தினர் வட இந்தியாவிலிருந்து வருவதற்கு முன்னர் வட இலங்கை மக்கள் நடமாட்டத்திற்குரிய பகுதியாக விளங்கியது எனவும். இந்நிலையே பிற் காலத்திலும் தொடர்ந்ததெனவும் குறிப்பிட்டுள்ளார். (Pieris 1917.04.07) போல் பீரிசைத் தொடர்ந்து 1946 காலப் பகுதி யில் கொடக்கும்பற மேற்கொண்ட ஆய்வு கந்தரோடையின் வரலாற்றுப் பழைமையை மேலும் வெளிப்படுத்த உதவின. இவை 1960 களில் பின்னர் அரச மட்டத்திலான ஆய்வை கந்தரோடையின் பக்கம் திசை திருப்பக் காரணமாக அமைந்தன. திட்டமிடப்பட்ட ஆய்வு என்ற வகையில் 1967இல் பென்சில் வேனியப் பல்கலைக்கழக அருங் காட்சி ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வு பல வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த ஆய்வு மூலம் யாழ்ப்பாணக் குடியேற்றத்தின் ஆரம்பம் பெரும் கற்காலப் பண்பாட்டிற்குரிய திராவிட மக்களது புலப் பெயர்வுடன் ஏற்பட்டதென்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன், பண்டு தொட்டு கந்தரோடை வட்டாரத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும், அயல் நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப், பண்பாட்டுத் தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகளும் ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டப்பட்டன.

இச்சான்றுகள் இலங்கையின் பண்டைய கால வரலாறு பற்றிய ஆய்வில் கந்தரோடையும் முக்கிய இடம்பெறக் காரணமாக அமைந்தது. இருப்பினும் 1980இற்கு முன்னர் வெளிவந்த ஆய்வுகளில் கந்தரோடையில் கிடைத்த தொல்லியல் சின்னங்கள் ஒரு பௌத்த சிங்களப் பண்பாட்டு மையமாகப் பார்க்கப்பட்ட அளவுக்கு அவற்றைத் தமிழர் வரலாற்றுடன் தொடர்பு படுத்தி அதிகம் பார்க்கப் பட்டதாகத் தெரியவில்லை. 1980களின் பிற்பகுதியில் கலாநிதி பொ. இரகுபதி ஆனைக்கோட்டையில் கண்டு பிடித்த குடாநாட்டின் முதலாவது பெருங்கற் கால ஈமச்சின்னங்களும் குடாநாட்டின் ஏனைய வட்டாரங்களில் அவர் கண்ட பண்டைய காலக் குடியிருப்புகளுக்குரிய சான்றுகளும் கந்தரோடையின் பின்னணியில் குடா நாட்டில் பரவலாகத் திராவிட மக்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்த உதவின. இரகுபதி யின் கண்டு பிடிப்புக்களும், அவர் முன் வைத்த சில முடிவுகளும் இலங்கைத் தமிழர் வரலாறு புதிய கண்ணோட்டத்தில் ஆராயப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டு காட்டின. (Ragupathy 1987) அண்மைக் காலங்க ளில் திரு. செ. கிருஷ்ணராஜா பரீட் சார்த்தமாக கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளிலும், மேலாய்வுகளிலும் கண்டுபிடித்த தொல்லியல் சின்னங்கள் தமிழரின் பூர்வீக வரலாற்றுக்குப் புது வெளிச்ச மூட்டுபவையாக உள்ளன. இவரது கண்டுபிடிப் புக்கள் பல ஏற்கனவே இங்கு அறியப்பட்டிருந்தாலும், முதன் முதலாக தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த மண் பாண்ட ஓடுகள் சிலவற்றை அவர் கண்டு பிடித்திருப்பது அதிமுக்கியத் துவம் வாய்ந் தது எனலாம். (கிருஷ்ணராஜா1997)

## கந்தரோடையும் கதிரமலையும்

கந்தரோடைத் தொல்லியல் ஆய்வின் முக்கியத்துவம் அதன் குடிகளாகப் பெருங்கற் காலப் பண்பாட்டுக்குரிய மக்கள் வாழ்ந்ததற் கான சின்னங்கள் கண்டுபிடிக் கப்பட்டதில் பெரிதும் தங்கியுள்ளது. பெருங் கற்காலப் பண் பாட்டில் குடியிருப்பு, ஈமச் சின்னம், வயல், குளம் என்பன முக்கிய அம்சமாகத் திகழ்கின்றன. கந்தரோடையில் 1917 முதல் மேற்கொள் ளப்பட்டு வரும் ஆய்வில் பெருங் கற்கால மக்களது குடியிருப்புக்களுக்குரிய சின்னங்களே இது வரை காலமும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

அச் சின்னங்கள் கூட பௌத்த மதம் தொடர்பான சான்றுகள் காணப்படும் இடங்களிலும், பிற்காலத்தில் அதன் சுற்றாடல்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் நிச்சயம் இவ்விடங்களுக்கு அருகில் பெருங்கற்கால ஈமச் சின்னங்களும். அப்பண்பாட்டு மக்களுக்குரிய குளம், வயற் பரப்பு என்பவற்றிற்குரிய சான்றுகளும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதுவரை அதற்குரிய எந்த விதத் தடயமும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த வெற்றிடம் கந்தரோடை யின் ஆதிக் குடியிருப்பு பற்றிய தொல்லியல் ஆய்வு ஆரம்ப நிலையில் இன்றும் இருப்பதைக் காட்டுகிறது.

### ஆதிக்குடிகளும் கந்தரோடையும்

இலங்கையில் தொன்மையான குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் காணப்படும் தொல்லியல் மையங்களில் ஒன்றாக கந்தரோடை விளங்குகின்றது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பத்துக்கு மேற்பட்ட பெருங்கற் காலக் குடியிருப்பு மையங்களை அடையாளம் க்ண்ட இரகுபதி (1983:12) அவற்றின் தலைமைக் குடியிருப்பு மையமாகக் கந்தரோடையைக் கூறுகிறார். இதற்குச் சான்றாக கந்தரோடையினுள் சில தொல்லியல் மையங்களில் கிடைத்த ஆதிக் குடியிருப்புக்களுக்குரிய மிதமான தொல்லியல் சான்றுகளை எடுத்துக் காட்டியுள்ளார். (Ragupathy 1987) இச் சான்றுகளை அவை கண்டெடுக்கப்பட்ட இடங் களுக்குரிய சான்றுகளாக மட்டும் நோக்காது அவற்றுடன் இணைந்த பரந்த வட்டாரத்திற்குரிய சான்றுகளாக நோக்கப்பட வேண்டும்.

வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
ப. புஷ்பரட்ணம்

ஆயினும் இலங்கையின் ஏனைய வட்டாரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிக்குடியிருப்புகளுக்குரிய சான்றுகளுடன் கந்தரோடையில் பெறப்பட்ட சான்றுகளை ஒப்பிடும் போது கந்தரோடையின் குடியிருப்புக்கள் கால அடிப்படையிலும், பண்பாட்டடிப்படையிலும் சற்றுப் பிற்பட்ட காலத்திற்குரியதாகவே உள்ளன. (தொடரும்)

# இந்திய பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி அமெரிக்க பாதுகாப்பு அமைச்சருடன் சந்திப்பு

## இந்தியாவுக்கு ஏவுகணைகள் விற்பனை-அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவ அமைச்சரை இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி



நேற்று முன்தினம் சந்தித்து முதல் கட்ட பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த நிலையில் இந்தியாவுக்கு இந்திய ரூபா680 ரூபா கோடி மதிப்புள்ள ஏவுகணைகள் விற்பனை செய்யப்படும் என்று அமெரிக்க இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தியா-அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம் பல் வேறுதடைகளை தாண்டி அமெரிக்க பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெறவேண்டிய இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸ் இந்த ஒப்பந்தத்துக்கு இந்த ஆண்டிலேயே அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்.

இந்த நிலையில்இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி அமெரிக்கா சென்றுள்ளார். நேற்றுமுன்தினம் அவர் அமெரிக்க இராணுவ அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ்சை சந்தித்து முதல் கட்ட பேச்சுவார்த்தையை தொடங்கினார். இராணுவம் பிராந்திய மற்றும் சர்வதேச விவகார பாதுகாப்பு உள்ளிட்ட பல் வேறு அம்சங்கள்இந்த பேச்சுவார்த்தையில் இடம்பெற்று இருந்ததாக அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கவெளியுறவு மந்திரி கொண்டலிசா ரைஸ்சுடனும் அந்தோனிபேச்சு நடத்துகிறார். அணுசக்தி ஒப்பந்தம் இதில் முக்கிய இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சந்திப்பை தொடர்ந்து வெள்ளை மாளிகையில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்டீபன் ஹாட்லியுடன் ஏ.கே. அந்தோனி பேச்சு நடத்துகிறார்.

இருநாட்டு இராணுவமந்திரிகள் நடத்திய பேச்சுவார்த்தை மிகவும் திருப்திகரமாக இருந்ததாக மற்றொரு மூத்த அதிகாரி கருத்துத் தெரிவித்தார். அமெரிக்கஇராணுவ தலைமையகத்தில் ஏ.கே.அந்தோனிக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பு இரு நாடுகளுக்கு இடையே சமீபத்தில் அதிகரித்துவரும் நட்புறவை பிரதிபலிப்பதாக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இந்த ஆண்டு நிறைவேறுமா?**

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி நடைபெறும் தேர்தலை தொடர்ந்து தற்போதைய அதிபர் புஷ் ஜனவரிமாதம் 28ஆம் திகதி பதவி விலகுகிறார் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் செப்டெம்பர் மாத இறுதியில் பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்படுகிறது.

அணுசக்தி ஒப்பந்தம் தாக்கல்செய்யப்பட்ட வாக்கெடுப்பு நடத்துவதற்கு 30நாட்கள் அவகாசம் தேவைப்படுவதால் இந்த ஆண்டிலேயே ஒப்பந்தம் நிறைவேறுமா? என்ற கேள்விக் குறியும் எழுந்துள்ளது என்றாலும் வெளியுறவு அமைச்சர் கொண்டலிசாரைஸ் விரைவில் பாராளுமன்றத்தின் ஒப்புதல் கிடைப்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். (அ-6)

## இராணுவ நடவடிக்கையில் 11 தீவிரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் உள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் பதுங்கி இருக்கும் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தீவிரவாதிகள் பதுங்கி இருக்கும் வீடுகளில் இராணுவம் புகுந்து சோதனை நடத்தியது. இதில் 11 தீவிரவாதிகள் பலியானார்கள்.

கோசா பாண்டே பகுதியில் இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலை தொடர்ந்து தான் இராணுவம் தீவிர வேட்டையை தொடங்கியது. அந்த பகுதியில் கடந்த ஒருவார காலமாக ஊரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# மக்கெயின், பாலினது வாக்குறுதிகள் பன்றி மீது பூசிய உதட்டுச் சாயம் போன்றது


## பராக் ஒபாமா சாடல்

அமெரிக்க குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் மக்கெயினதும் அவரது உப ஜனாதிபதி வேட்பாளரான சாரா பாலினதும் வாக்குறுதிகள், பன்றியின் மீது பூசப்பட்ட உதட்டுச் சாயம் போன்றது என ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமா தெரிவித்தார்.

வேர்ஜினியாவில் கூடியிருந்த ஆதரவாளர்கள் முன்னிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை உரையாற்றுகையிலேயே பராக் ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.

நவம்பர் 4ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நடத்தப்பட்ட அண்மைய கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புகளில் பராக் ஒபாமாவை விட மக்கெயின் முன்னணியிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பராக் ஒபாமா குறிப்பிடுகையில், நாங்கள் வாக் கெடுப்புகளில் முன்னையில் இருந்த போதும் பின்னால் தள்ளப்பட்ட போதும் மாற்றம் தொடர்பிலேயே கருத்துக்களை முன்வைத்தோம்.



இந்நிலையில் அவர்கள் தாங்கள் மாற்றத்துக் காக பாடுபடுவதாக திடீரென கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

கடந்த8 வருட காலமாக அதிகாரத்திலிருந்தவர்கள் கூறிய அதே கதையையே இவர்களும் கூறுகின்றனர் என தெரிவித்தார். நீங்கள் பன்றியின் முகத்தில் உதட்டுச் சாயத்தை பூசினால் அது மாறப்போவதில்லை. அது தொடர்ந்தும் பன்றியியாகவே இருக்கும் என ஒபாமா சாடினார். (அ-6)

## உலக தரிசனம்

# இந்திய பிரதமரையும் அமெரிக்க ஜனாதிபதியையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த சர்தாரி திட்டம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதி ஆஸிப் அலி சர்தாரி, இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள சர்தாரி, அங்கு இந்திய, அமெரிக்க தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பில் நற்செய்தியொன்றை இந்தியாவுக்கு வழங்கவுள்ளதாக சர்தாரி தனது பதவி யேற்பு வைபவத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில் மன்மோகன் சிங்குடனான இந்த சந்திப்பு முக்கியத்துவமிக்க ஒன்றாக கருதப்படுகிறது. (அ-6)

# இஸ்ரேலுடன் ஆயுத ஒப்பந்தத்துக்கு அமெரிக்க அரசாங்கம் அங்கீகாரம்


(வோஷிங்டன்)

அமெரிக்க அரசாங்கம் இஸ்ரேலுடனான 330 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 3 வெவ்வேறு ஆயுத ஒப்பதங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அங்கீகாரம் அளித்துள்ளது.

அன்றைய தினம் இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் வோஷிங்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# எண்ணெய் விநியோகத்தை கட்டுப்படுத்த ஒபெக் நாடுகள் தீர்மானம்

உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 100 அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ளது.



அல்ஜீரிய எண்ணெய்வள அமைச்சரும் ஒபெக் தலைவருமான சாகிப் கெலில்.

ஏப்ரல் மாதத்திற்கு பிறகு உலக சந்தையில் எண்ணெய் விலை இந்தளவுக்கு குறைவடைவது இதுவே முதற்தடவையாகும். விலை வீழ்ச்சியடைந்துள்ளமை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ள ஒபெக் நாடுகள், எண்ணெய் விநியோகத்தை கட்டுப்படுத்து வதற்கு தீர்மானித் துள்ளன.

தொடர்ச்சியாக அதிகரித்து வந்த எண்ணெய் விலை ஜுலை மாதத்தில் பீப்பாய் 147 அமெரிக்க டொலராக உயர்ந்தது. இதன் பின்னர் ஆகஸ்ட் மாதத்தில் முதன் முதலாக எண்ணெய்விலை வீழ்ச்சியடைந்தது.

இந்நிலைமை செப்டெம்பரிலும் தொடர்ந்தது இந்நிலையில், தற்போது லண்டன் சந்தையில் சர்வதேச மசகு எண்ணெய் விலை 100டொலராக குறைவடைந்துள்ளது.

ஒபெக் நாடுகளின் எண்ணெய் வள அமைச்சர்களின் மாநாடு வியன்னாவில் நடை பெற்றுக்கொண்டிருக்கும் போதே எண்ணெய் விலையில் எதிர்பாராத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த விலை வீழ்ச்சியானது எண்ணெய் சந்தையில் சமநிலையை தோற்றுவித் துள்ளதாக ஒபெக் நாடுகள் கருது கின்றன.

இதேவேளை எண்ணெய் விலை மேலும் குறைவடையலாம் என்று எண்ணெய் வள நாடுகள் எதிர்பார்க்கின்றன.

இதனால் ஒபெக் அமைப்பில் அங்கம் வகிக்கும் சவூதி அரேபியா உள்ளிட்ட 13 நாடுகளும் தமது விநியோக கோட்டாவை நாளொன்றுக்கு 29.67 மில்லியன் பீப்பாய்கள் என்ற அளவுக்கு கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளன. (அ-6)

# இயற்கையான பிரசவம் தாய், சேய் உறவை மேம்படுத்தும்

ஒரு தாய்க்கு இயற்கையானவழி முறையில் நிகழும் குழந்தைப் பிறப்பால் அந்தக் குழந்தைக்கும் தாய்க்கும் இடையிலான பிணைப்பு பலமடைந்து காணப்படுவதாகவும் அறுவைச் சிகிச்சை மூலம் பிறக்கும் குழந்தைக்கும் தாய்க்கும் இடையிலான பிணைப்பு இயற்கையானதைப் போன்று பலமானதாக இருக்க பல சந்தர்ப்பங்களில் தவறிவிடுவதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பிறந்த குழந்தையின் அழுகுரலுக்கு அதிகம் துலங்கும் தாய் மார்களாக இயற்கையானபிறப்பைக் கொடுத்த பெண்கள் விளங்க மற்றவர்கள் அவ்வாறு காண்பிக்கவில்லை என்று அந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

இதற்கு குழந்தைப்பிறப்பின்போது நிகழும் தாயின்யோனிமடல் சுருக்கத்தின்போது சுரக்கத் தூண்டப்படும் ஒக்சிரோஜன் எனும் ஓமோனின் சுரப்பும் அதன் மூளை மீதான தாக்கத்தின்பங்களிப்புமே அதிக காரணமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பிறப்பிக்கும் போதும் இயற்கையான பிறப்பின் போதும் ஒரு தாயில் சுரக்கத் தூண்டப்படும் அளவுக்கு ஒக்சிரோஜன் சுரப்பதில்லை என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையேஇந்தப் பலமான தொடர்பு தாய்மார் பிள்ளையின் தூண்டலுக்கு துலங்குவதில் மட்டுமன்றி அவர்களின் மன நிலையிலும் செல்வாக்குச் செலுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

# எனது மத வழிபாட்டு உரிமை அரசாங்கத்தினால் மீறப்பட்டுள்ளது

## சபையில் ஜயலத் எம்.பி. சிறப்புரிமை பிரச்சினை



(கொழும்பு)

மருதமடு திருப்பதிக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் சென்றிருந்த நான் தேவாலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த வேளையில் படையினரால் அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டேன்.

அதனையடுத்து வழிபாட்டை இடைநிறுத்தி அங்கிருந்துவெளியேறினேன் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் ஹம்பகா மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

இதன் மூலம் மத வழிபாட்டில் ஈடுபடுவதற்காக அரசியல் யாப்பு வழங்கியுள்ள உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை காலை எம்.பிக்களுக்கான வாய் மூல கேள்வி நேரத்தின் முடிவில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பி உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். ஜயலத் ஜெயவர்த்தன எம்.பி மேலும் கூறியதாவது,

மடுத்திருப்பலிக்கு நான் ஆண்டு தோறும் யாத்திரை செல்வது வழக்கம் அந்த வகையில் படையினர் மடுப் பிரதேசத்தை கைப்பற்றி யுள்ள சூழ் நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் பாது காப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று அங்கு சென் றிருந்தேன்.

அங்கே தேவால யத்தினுள் மடு அன்னையின் திருச் சொரூ பத்திற்கு முன்பு மன்றாடிக்கொண்டிருந்த வேளையில் ஒரு படை வீரர் வந்து இராணுவ உயர் அதிகாரி அழைப் பதாக கூறினார்.

இதனையடுத்து நான் வழிபாட்டை நிறுத்தி விட்டு அந்த படை வீரருடன் சென் றேன்.

அங்கு நின்றிருந்த இராணுவ உயர் அதிகாரி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான நீங்கள் இங்கே நிற்கக்கூடாது உடனடியாக வெளியேறுமாறு கடும் தொனியில் உத்தரவிட்டார்.

இதனையடுத்து தேவையற்ற அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்வதற்காக அங்கிருந்து வெளியேறினேன்.

இதனால் மத வழிபாட்டில் ஈடுபடும் உரிமையும் எனது சிறப்புரிமையும் மீறப்பட்டுள் ளன. (அ-6)

## உதவிப் பொலிஸ் அதிகாரிக்கு பத்து வருட கடுழியச் சிறை

பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை மாற்றி வேறு பொருட்களை வைத்த குற்றச்சாட்டுநிரூபிக்கப்பட்டமையினால் உதவிப் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு பத்து வருட கடுழியச்சிறைத் தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

மாத்தளை மேல்நீதிமன்றினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சட்டவிரோதமாக மரங்களை அறுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருநபரை கைது செய்த போது பறிமுதல் செய்யப்பட்ட மரம் அறுக்கும் இயந்திரத்திற்கு பதிலாக வேறு இயந்திரம் ஒன்றை குறித்த பொலிஸ் உத் தியோகத்தர் நீதிமன்றில் சமர்ப்பித்துள் ளார்.

குறித்த சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்ட மரம் அறுக்கும் நிலையத்தின் உரிமையாளருக்கு பத்துவருட கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த இரண்டு குற்ற வாளி களுக்கு 25ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## ஆலயங்கள் அமைப்பதற்கு விசேட நடைமுறைகள் ஜனாதிபதி உத்தரவு

எதிர்காலத்தில் மதஸ் தலங்களை அமைப்பது தொடர்பில் விசேட சட்ட விதிகள் பின்பற்றப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மதஸ்தலங்களை அமைப்பது தொடர்பில் சமய விவகார அமைச்சின் அனுமதியுடன் செயற்படவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவுபிறப்பித்துள்ளார்.

பௌத்த விகாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இந்து ஆலயங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளி வாசல்கள் எதிர்காலத்தில் நினைத்தவாறு அமைக்க முடியாது என தெரிவிக்கப்படுகிறது.

சமய விவகார அமைச்சின் சட்ட விதிகளுக்கு அமைவாகவே ஆலயங்கள் அமைக்கப் படவேண்டும் என் குறிப்பிட்டுள்ளது.

மத ஸ்தலங்கள் தொடர்பில் மக்களிடம் காணப்படும் நன்மதிப்பை பேணும் நோக்கில் இந்த புதிய நடைமுறை அமுல்படுத்தப் படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.(அ-6)

# தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குரல் கொடுக்கும் எனது வாயை மூட முயற்சி

## சபையில் மனோ கணேசன் எம்.பி.

(கொழும்பு)



தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குரல் கொடுக்கும் எனது வாயை மூடி அரசியல் பயணத்தை தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சிமேற்கொண்டுள்ளது என்று மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

எனக்கு தனிப்பட்ட ரீதியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரகால ஒழுங்கு விதி களை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது. ஆளுந்தரப்பில் காணப்படும் வெற்று ஆசனங் களை பார்க்கும் போது தமிழ் தலைவர்கள் உங்களது வாதத்தை முன்வையுங்கள். ஆனால் நாம் போரை முன்னெடுப்போம் என்று சொல்லாமல் சொல்லுவதைப் போன்று உள்ளது.

இவ்வளவு காலமும் அவசரகால பிரேரணையை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் பேசிய நான், இன்று எனது பிரச்சினை குறித்து பேசலாம் என்று நினைக்கின்றேன்.

பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் ஒரு வாக்கு மூலம் வழங்குமாறு எனக்கு எழுத்து மூலம் கடந்தவாரம் அறிவித்திருந்தனர். அதற்கு அமைய நான் பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அலுவலகத்திற்கு சென்று 6 மணித்தியாலம் வாக்கு மூலம் அளித்தேன்.

2002ஆம் ஆண்டு சமாதான காலத்தில் மனோ கணேசன் மாத்திரமல்ல, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் ஊடகவியலாளர்களும் கிளி நொச்சிக்கு சென்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் கருணாவின் பிரச்சினை ஏற்பட்ட வேளையில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட செய்தி ஒன்றை விடுதலைப் புலிகளின் தலைமையிடம் தெரிவிப்பதாக கிளிநொச்சிக்குச்சென்றேன்.

இந்த நிலையில் நான் கிளிநொச்சிக்கு எப்போது சென்றேன், ஏன் சென்றேன், யாரைச் சந்தித்தேன், என்ன பேசினேன் என்பது தொடர்பில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கேள்வி எழுப்பினர்.

மனோ கணோசனிடம் எந்தத் தவறும் இல்லை. அவரைதவறாக நோக்குபவர்களிடமே தவறு இல்லை. மனோகணேசனை யாரும் வீழ்த்தமுடியாது யாருடைய நிகழ்ச்சி நிரலுக்கும் அமைவாக நான் நடக்க மாட்டேன் எனக்கு சரி எனப்படுவதை செய்வதற்கு நான் பின் நிற்கமாட்டேன். விஜித ஹேரத், ஜயலத் ஜயவர்த்தன உள்ளிட்ட சில எம்.பிக்களிடமே பயங்கரவாத தடுப்புப்பிரி வினர் விசாரணை நடத்தினர்.

ஆனால் என்னிடம் விசாரணை நடத்தப்பட்ட போது அதனை பெரிய விடயமாக்கி நான் புலிகளிடம் கொடுக்கல் வாங்கல் செய்யும் நபராக குற்றம் சாட்டப்பட்டேன்.

எனது வாயை மூடி, எனது பயணத்தை தடுத்து அரசாங்கத்திடம் சரணாகதி அடைய வைக்க அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது. எனது குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் நான் பதிலளிக்க தயாராகவுள்ளேன். நான் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லப்போவதில்லை. இந்த நிலையில் எனக்கு தனிப்பட்ட ரீதியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள் ளது. (அ-6)

# மஹிந்த ராஜபக்ஷ சமாதானத்தை ஏற்படுத்துவார் சீன வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை வெளியீடு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் தலைமையின் கீழ் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படும் எனத் தான் எதிர்பார்ப்பதாக சீனவெளி விவகார அமைச்சர் யங்ஜிச்சி நம்பிக்கை வெளியிட் டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவை அலரி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் சந்தித்த போதே சீன வெளிவிவகார அமைச்சர் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட் டைப் பேணுவதற்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் சீன அர சாங்கம் தமது ஒத்துழைப்பை வழங்கும் எனவும் சீன வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னர்ஆட்சியில்இருந்த அரசாங்கம் விடுதலைப் புலிகளு டன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்றதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இங்கு தெரிவித்தார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்து நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்பத் தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அவர் இங்கு சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதிக்கும் சீன வெளி யுறவு அமைச்சருக்கும் இடையி லான இந்தக் கலந்துரையாடலின் பின்னர் 50மில்லியன் யுவான் பெறு மதியான ஒப்பந்தம்ஒன்று இரண்டு தரப்பின ராலும் கைச்சாத் திடப்பட்டது. (அ)

# இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு மதரீதியில் ஒடுக்கு முறைக்கான நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## சிறுபான்மை இனங்கள் ஒன்றிணைய வேண்டும் என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

படையினரின் வெற்றி மனோபாவத்தில் தெற்கில் இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு மதரீதியிலான ஒடுக்கு முறைக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதனை எதிர்கொள்வதற்கு சிறுபான்மையினங்கள் ஒன்றிணைய வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது, கொழுந்து விட்டெரிகின்ற இனப் பிரச்சினைக்கு வன்முறைகளின் மூலமாக தீர்வுகாண இயலாது என்பது முஸ்லிம்களின் நிலைப்பாடாகும்.

பயங்கரவாதத்தை ஒழிக்கின்றோம் என்ற போர்வையில் கொடூரமான யுத்தம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கிழக்கிலிருந்து பயங்கரவாதம் துரத்தப்பட்டு விட்டதாக கூறப்படுகின்ற போதும் அங்கு நடக்கும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடைபெறுவதில்லை.

யுத்தத்தில் வெற்றியடைந்து விடுவோம் என்ற மனப்பாங்கில் தெற்கில் ஊழல் மோசடிகள் இடம் பெறுவது தொடர்பில் எவரும் அலட்டிக்கொள்வதில்லை, கடந்த இரண்டு வருடங்களுக்குள் இடம் பெற்ற கொலைகள் குறிப்பாக ஊடக வியலாளர்கள் கடத்தி கொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் எவ்விதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறான விடயத்தில் பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கை கேவலமானதாக இருக்கின்றது. கிழக்கில் குச்சவெளி பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் விறகு வெட்டி விட்டுதிரும்பிய முஸ்லிம் இளைஞர்களில் இருவர் அவ்விடத்திலும் மற்றொரு இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில நாட்களுக்குள் பலியாகிவிட்டனர்.




இந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னணி என்ன? சீருடை தரித்தவர்களே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தைமேற்கொண்டதாக கண்ட சாட்சிகள் சாட்சி கூறுகின்றன.

எனினும் பொலிஸார் அதனை விடுதலைப் புலிகளின் தலையிலேயே போட்டு விடுகின்றனர். தெற்கில் மதஸ்தலங்களை உடைப்பது பெரும் விபரீதத்தை ஏற்படுத்தும். தங்களது உரிமமான பூமியை பிறிதொரு இனத்தினருடையது என்று கூறுகின்ற போது அமைச்சரவையில் மௌனிகளாக இருப்பதையிட்டு வெட்கமடைகின்றேன். அதற்கு மக்கள் பதிலளிப்பார்கள். (அ-5)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த விரைவில் சட்ட மூலம்-விஜிதஹேரத்

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் விரைவில் தீர்மானிக்கப்படும் என அரச சார்பற்ற



நிறுவனங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளருமான விஜயதஹேரத் கூறினார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே விஜியஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

பல அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப்புலிகளுக்கு உதவி வருவதாகவும் குறிப்பாக நோர்வேயை தளமாகக் கொண்டு இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப்புலிகளுக்குப் பல உதவிகளை செய்திருப்பதாகவும் குற்றம் சாட்டிய விமல் வீரவன்ச விடுதலைப்புலிகள் வாகனங்களை பறிக்கிறார்கள் என்று கூறிக் கொண்டு தாமாகவே நோர்வே அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று விடுதலைப் புலிகளுக்கு வாகனங்களை வழங்கியிருப்பதாக கூறினார்.

விடுதலைப்புலிகளுக்கு மிகவும் வேண்டப்பட்ட நாடாக நோர்வே இருப்பதா அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் புலிகள் செயற்பட மாட்டார்கள் எனவும் இவ்வாறான அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கையை முன்னெடுக்கும் எனவும் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த விஜிய ஹேரத் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான பாது காப்பு அமைச்சு மற்றும் வெளி விவகார அமைச்சு சிபார்சுகள் கிடைக்கப்பட்ட பின்னர் உரிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறினார்.

இதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு விரைவில் சட்ட மூலம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படும் என அரசாங்கத்தின் சார்பிலும் பதிலளிக்கப்பட்டது.

**வன்னியிலிருந்து வெளியேறும் அரச சார்பற்ற நிறுவனங்கள்**

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்க படைகளுக்கும் இடையில் மோதல்கள் உக்கிரமடைந்துள்ள நிலையில் அரசாங்கத்தின் உத்தரவுக்கமைய வன்னியிலிருந்து பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியேற ஆரம்பித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்கள் உட்பட பல அரச சார்பற்ற நிறுவ னங்கள் தமது உடமைகளுடன் வன்னியிலிருந்து வெளியேறி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. ஐக்கிய நாடு கள் மனிதாபிமான நிறுவனங்கள் இரண்டு வராங்களுக்குள் வன்னியிலிருந்து வெளியோறி விடும் என கொழும்பில் உள்ள ஐ.நா. அதிகாரி ஒருவர் கூறி யிருந்தார்.

எனினும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வன்னியில் இடம் பெயர்ந்திருப்பதால் அவர்களுக்கு அருகில் இருந்து சேவையாற்றும் நோக்கில் தொடர்ந்தும் வன்னியில் தங்கியிருக்கப்போவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-6)

# இரு நாட்டு அரசுகளின் இணக்கப்பாட்டுடனேயே இலங்கைக்கு தொழில் நுட்பவியலாளர் அனுப்பிவைப்பு

## இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள பாரத் தொழில் நுட்பவியல் நிறுவனமே இலங்கை படைத்தரப்புக்கான ராடர் கருவிகளை இயக்கும் பொறியியல் தொழில் நுட்பவியலாளர்களை வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்கள் இணங்கிக் கொண்டதற்கு அமைவாக குறித்த இந்த நிறுவனம் பொறியியல் தொழில் நுட்பவியலாளர்களை வழங்கிவரு கின்றது என்று கொழும்பில் உள்ள இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் செயற்பட்டு வரும் பாரத் தொழில்நுட்ப நிறுவனம் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக இலங்கை படைத்தரப்புக்கு தேவை யானபொறியியல் தொழில் நுட்ப வியளாளர்களை அவ்வப் போது அனுப்பிவருகின்றது. திறனாயவு செயது ராடர்களை இயக்கக்கூடிய பொறியியல் தொழில் நுட்பவியலாளர்கள் 265பேர்இது வரை இந்த நிறுவனத்தினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-6)

# வெளிநாட்டவர்கள் பணியாற்றினார்கள் என்பதில் உண்மை இல்லை -அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களில் காயமடைந்த இந்திய ரோடர் கருவிகளை இயக்கும் தொழில் நுட்ப வியலாளர்கள் இருவரும் தொடர்ந்து கொழும்பு வைத்திய சாலையில்சிகிச்சை பெற்று வருவதாகத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த செவ்வாய்கிழமை வவுனியா முப்படைத் தலைமையகம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய வான் மற்றும் தரைவழித் தாக்குதலில் இலங்கை விமானப் படைக்காக பணியாற்றிவந்த இரண்டு இந்திய ரேடர் தொழில்நுட்ப வியலாளர் இருவர் காயமடைந்திருந்தனர்.

இந்தியர்கள் இருவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ள போதும் இலங்கை இராணுவப் பேச்சாளர்பிரிகேடியர் உதய நாணயகார மற்றும் பாது காப்பு பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் இந்தியர்கள் எவரும் காயமடைய வில்லையென மறுத்து வருகின்றனர்.

இவ்வாறான இக் கட்டான சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்குப் போது மானபலம் எம்மிடம் உள்ளது. எனவே வெளிநாட்டவர்கள் பணியாற்றி வந்தார்கள் எனக் கூறப்படுவதில் உண்மை இல்லை என அமைச்சர் ரம்புக் வெல ஊடகங்களிடம் கூறினார்.

2005 ஆம் ஆண்டு இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ரேடர் கருவிகளை இயக்குவதற்காக ஏ.கே.தாகூர் மற்றும் சிந்தாமணி ராவுட் ஆகிய இரண்டு தொழில் நுட்பவியலாளர்களும் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் வவுனியா முப்படைத் தலை மையகத்தில் பணியாற்றி வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதே நேரம் இரண்டுஇந்திய தொழில் நுட்பவியலாளர்கள் சிறிய காயங்களுக்கு உள்ளானதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்ததாக ஆங்கில ஊடகமொன்றுதெரிவிக்கிறது. அவர்கள் இருவரும்சிகிச்சை பெற்று வருவதாகதூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

வவுனியா முப்படைத் தலைமையகம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய வான் மற்றும் தரைவழித் தாக்குதலில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும்12 இராணுவத்தினரும் உயிரிழந்ததுடன் விமானப்படையினர்ஐவர் உட்பட30பேர் காயமடைந்ததாக இராணுவத் தரப்பில் கூறப்படுகிறது. (அ)

# வன்னிப் பொதுமக்கள் அவலம் தொடர்பாக பான் கீ மூன் கருத்துக்களை அரசு விமர்சனம்

வன்னிப்பிரதேச பொதுமக்கள் மற்றும் யுத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீமூன் அண்மையில் வெளியிட்ட கருத்துக்களை இலங்கை அரசாங்கம் விமர் சித்துள்ளது.

இலங்கையின் உண்மை நிலவரங்களைப் புரிந்து கொள்ளாத நிலையில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளதாகச் சமாதான செயலகத்தின் தலைவர்ராஜீவ் விஜேசிங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த முன்நகர்வுகளின் காரணமாக வடபகுதி பொதுமக்கள் பெருமளவில் அல்லலுறுவதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அடிப் படையற்றவை எனத் தெரி விக்கப்படுகிறது.

ஏனைய நாடுகளில் இடம் பெறும் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு சில வேளையில் ஐக்கியநாடுகளின் செயலாளர் கருத்து வெளியிட்டிருக்கக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும். இவ்வாறான அறிக்கைகளின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சர்வதேச சமூகத்தில் சாதகமான சூழ்நிலை தோன்றக்கூடும் என ராஜீவ விஜேயசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். (அ-6)

# ஜனாதிபதி படுகொலை முயற்சி தொடர்பாக ஜானக பெரேராவிடம் பொலிஸார் விசாரணை

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி படுகொலை முயற்சி தொடர்பாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டு கிளிநொச்சி சென்ற காரணத்தினால் மனோ கணேசனிடம் பயங்கர வாதத் தடுப்புப்பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார்.

அரசாங்கத்திற்குஎதிராக குரல் கொடுப்போர் மீது பல்வேறு அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றி பெற்றமாகாண சபை உறுப்பினர்களின்பதவிப் பிரமாண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதுரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு அடக்கு முறைகளுக்கு மத்தியில் குறித்த உறுப்பினர்கள் மாகாண சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகஅவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

17ஆவது திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்படுவதன் மூலம் நாட்டின் நீதி நிலைநாட்டு வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என ரணில் விக்ர மசிங்க தெரிவித்துள்ளார். (அ-6)




யாழ். இந்து மகளிர் கல்லூரியின்
பரிசளிப்புவிழாவும் "சக்தி" சஞ்சிகை வெளியீடும்
தலைவர்
திருமதி வேதநாயகி பேரின்பநாதன்
(அதிபர்)
பிரதம விருந்தினர்
திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்
(கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணக் கல்வி வலயம்)
சிறப்பு விருந்தினர்
பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
காலம்: 13.09.2008 சனிக்கிழமை
நேரம்: மு.ப 9.30
இடம்: விசாலாட்சி மண்டபம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(சி/1523)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Pharmacist Course
(Ceylon Medical College Council)
கல்வித் தகமைகள் :- GCE O/L ஆங்கிலம் சாதாரணசித்தி ,
GCE A/L இரசாயனம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி
பயிற்சி வகுப்புக்கள்: 8.00 -2.00 (ஞாயிறு)
ஆரம்பம்: ஞாயிறு காலை 8.00 மணி
குறிப்பு :-இப்பரீட்சைக்கு வயது எல்லை இல்லாதபடியால் மேற்படி தகமை உள்ளோர் இக்கற்கை நெறிக்கு இணைந்து கொள்ளலாம்.
Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road.
(Near Commercial Bank)
Jaffna.
(சி/1524)

> வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறு மன்னிக்கப்படக் கூடாததாகும்.
>
> – அப்துற் றஹீம்

வலம்புரி

## பொது அமைப்புக்களின் வெளியேற்றம் மனித நேயமற்ற செயல்

வன்னியிலிருந்து தொண்டு நிறுவனங்கள் வெளியேறுவது யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டுள்ள மக்களை அநாதரவாக்கியுள்ளது.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பணியாற்றுவது யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களை ஓரளவேனும் ஆற்றுப்படுத்தியது.

சர்வதேச அமைப்புக்கள் உள்ளன என்ற நம்பிக்கை அந்த மக்களுக்கு இருந்தது. ஆனால் அரசின் அறிவிப்பையடுத்து சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வன்னியை விட்டு வெளியேறுவதானது தமிழ் மக்களை ஏதிலிகளாக்கிவிட்டது.

உலகின் பொது அமைதிக்காகவும் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காகவும் உருவானதே ஐக்கிய நாடுகள் சபையாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்தைத் தொடர்ந்து மன்னிப்புச் சபைகள், மனித உரிமை அமைப்புக்கள், சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் எனப் பல பொதுநல தொண்டு நிறுவனங்கள் தோற்றம் பெற்றன.

ஆனால் இன்று ஈழத் தமிழர்கள் யுத்தத்தின் கொடூரத்தால் எல்லாம் இழந்து உயிரைப் பாதுகாப்பதற்காக ஏங்கித் தவிக்கும் போது தொண்டு நிறுவனங்கள் எந்த ஆறுதல் வார்த்தையும் கூறாமல் வெளியேறுவது எவ்வகையில் நியாயமாகும்?

'அரசின் உத்தரவின் பேரில் வன்னியிலிருந்து வெளியேறுகின்றோம் எனக் கூறிக் கொள்ளலாம். ஆனால் வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுப் பட்டினியில் வாடும் அப்பாவி மக்களுக்கு நீங்கள் செய்யும் உதவி என்ன? என்பதே எமது கேள்வியாகும்.

அரசு கூறிவிட்டது, அதனால் நாங்கள் வன்னியை விட்டு வெளியேறுகின்றோம் என்க் கூறுவதாயின், இந்த அமைப்புக்களினால் பாதிக்கப்பட்ட மக்க்ளுக்கு என்ன நன்மை?

சர்வதேச அமைப்புக்கள் இருக்கின்றன. இந்த அமைப்புக்கள் நாம் படும் இன்னல்களை வெளி உலகிற்குத் தெரியப்படுத்தும். அதன் மூலம் உலக நாடு தமது துன்பத்தை நீக்க உதவும் என்ற நம்பிக்கைகளுக்கெல்லாம் உலை வைத்து தொண்டு நிறுவனங்கள் வன்னியை விட்டு வெளியேறுகின்றன.

ஐ.நா. சபையின் செயலாளர் வன்னி நிலைவரம் குறித்துக் கவலை கொள்கிறார். எல்லாமே வெறும் நாடகம். இந்த நாடகத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் அல்லல்படுவது வேதனையிலும் வேதனை.

# 'யாவருக்கும் கல்வி' என்ற யுனெஸ்கோவின் இலக்கை 2011 இல் இலங்கை அடையும்

### கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டளவில் "யாவருக்கும் கல்வி" என்ற யுனெஸ்கோ அமைப்பின் இலக்கை இலங்கையில் அடைய முடியுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். யாவருக்கும் கல்வி என்ற இலக்கை அடைவதற்கான வேலைத் திட்டங்கள் தொடர்பான இடைக்கால அறிக்கையை கடந்த வாரம் கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், 2000 ஆம் ஆண்டில் நடை பெற்ற யுனெஸ்கோ அமைப்பின் கல்வி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய 2015 ஆம் ஆண்டில் யாவருக்கும் கல்வியை சர்வதேச ரீதியில் வழங்கும் ஆறு அம்ச வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டு அத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் இலங்கையில் இவ்வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக நடை பெற்று வருகின்றன. இதனால் 2011 ஆம் ஆண்டில் யாவருக்கும் கல்வி என்ற இலக்கை அடைய முடியும். இவ்விலக்கை அடைவதற்காக எமது கல்வி அமைச்சான, சுகாதார அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், உலக வங்கி, யுனெஸ்கோ மற்றும் யுனிசெப் அமைப்புகளுடன் இணைந்து சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புதல், பண்பு ரீதியான கல்வியை வழங்குதல், ஆரம்ப கட்டாயக் கல்வியை வழங்குதல், தொழில்சார் கல்வியை பெற்றுக் கொடுத்தல் மற்றும் வயது வந்தோரின் எழுத்தறிவு வீதத்தை 80 வீதத்திற்கு உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

'யாவருக்கும் கல்வி' என்ற யுனெஸ்கோ அமைப்பின் இலக்கை அடைவதற்கான செயற்றிட்டத்தை தெற்காசியாவிலே இலங்கை மட்டுமே வெற்றிகரமாக முன்னெடுத்து வருவதாக அமைச்சர் கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களிலும் பார்க்க கல்வி அபிவிருத்திக்காக கூடிய பணம் செலவிடப்பட்டு வருகிறது. கடந்த இரண்டரை வருடங்களாக கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களின் பயனாக பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாணவர்களின் பரீட்சை அடைவு மட்டங்களில் வளர்ச்சி காணப்பட்டுள்ளதோடு கஷ்டப் பிரதேச பாடசாலைகள் பலவற்றின் மனித வள மற்றும்பௌதீக வளங்களிலும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இசுறு பாட சாலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் ஒரு பாடசாலை தெரிவு செய்யப்பட்டு முழு அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வேலைத் திட்டத்திற்காக 110 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப் பட்டுள்ளது. தெற்காசிய பிராந்தியத்தில் 'யாவருக்கும் கல்வி' என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் இலங்கை முன்னிலை வகிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றார். இந்நிகழ்வில் உலக வங்கி, யுனெஸ்கோ, யுனி செப் என்பவற்றின் பிரதி நிதிகளும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ-6)

## இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசின் அணுகுமுறை மாற்றப்படவேண்டும்

### பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் ராமதாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான இந்திய மத்திய அரசின் அணுகு முறை மாற்றப்படவேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். தமிழகம் நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசு இலங்கை அரசாங்கத்திடம் செய்து வரும்இராணுவ உதவிகளை நிறுத்த வேண்டும். இது தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதி மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் மற்றும் தமிழக மீனவர் கள் இலங்கை கடற்பரப்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன குறித்து ஆராய்வதற்காக விரைவில் சர்வகட்சிக் குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் எனவும் அவர் இங்கு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஊடகவியலாளர்களுக்கு புகலிடம் வழங்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் வேண்டுகோள்

## எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு விடுத்துள்ளது

(கொழும்பு)

புகலிடம் கோருவோர் தொடர்பான ஐரோப்பிய கொள்கை குறித்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் உலகெங்கும் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியுள்ள ஊடகவியலாளர்களுக்கு புகலிடம் வழங்குவதுகுறித்து ஆராயுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 27நாடுகளுக்கும் எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமகலாத்தில் அதிகமான ஊடகவியலாளர்கள் புகலிடம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக எரித்திரியா, ஈரான், ஈராக், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகம் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்றும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

புகலிடம் பெறுவதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்திடம் விண்ணப்பித்து நீண்ட காலம் காத்திருப்பதாலும் மேலைத்தேய நாடுகள் இலகுவில் புகலிடம் வழங்க மறுப்பதனாலும் அதிகமானோர் சட்ட ரீதியற்ற முறையில் இந் நாடுகளுக்குள் குடியேற முயற்சிப்பதாகவும் அந்த அமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந் நிலையில் அகதி அந்தஸ்தினைப் பெற்றுக்கொள்ளாத ஊடகவியலாளர்களுக்கும் அவர்களது பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

அச்சுறுத்தல்கள் காரணமாக சில ஊடகவியலாளர்கள் வருடக் கணக்கில் அகதிமுகாம்களிலும், நகரங்களிலும் தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்துவருவதாகவும் எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 8ஆம் திகதி முதல் இரு தினங்களுக்கு பரிஸ் நகரில் நடைபெறவுள்ள அமைச்சர்கள் மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் புகலிடக் கொள்கை குறித்து ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 37

இல்லறம் தான் உலகில் சிறந்த அறமாகும். துறவறம் தன்னை மட்டும் ஈடேற்றுவதற்காக மேற்கொள்ளப்படுவது. இல்வாழ்க்கை வாழ்பவன் பரநலம் பேணும் பண்புடையவனென வள்ளுவப் பெருந்தகையும் விளக்கியுள்ளார். தென்புலத்தில் வாழ்பவர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், தான் என ஐவகையினரையும் ஓம்பிக் காக்கும் பணியை இல்லறத்தான் செய்கின்றான். இத்தகைய பரநலம் பேணுவதற்கு ஒரு சிறந்த வாழ்க்கைத் துணை இன்றியமையாதது.

தெய்வங்களும் இப் பண்பினை மக்களுக்கு உணர்த்துகின்றன. ஞானசம்பந்தர் தனது பாடலில் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். இறைவனை இறைவியுடன் கண்ட அவருக்கு அக்காட்சி ஒரு உண்மையையும் விளக்கியது. ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் அன்பான இல் வாழ்க்கையே எல்லோரும் வாழ வேண்டும் என்பதை இறைவனே காட்டுவது போலிருந்தது. சம்பந்தர் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும் இதனை நன்கு கண்டு உணர்ந்திருந்தார். புகலி நகரில் வீற்றிருக்கும் இறைவன் இறைவியுடன் வீற்றி ருக்கும் காட்சியைக் கண்ட போது ஒரு சிறந்த வாழ்வியல் முறைமையை இறைவனே காட்டுவதை உணர்ந்தார்.

இறைவன் வீற்றிருந்த கோலத்தை உற்றுப் பார்க்கிறார். நெற்றியிலும் ஒரு கண்ணுடன் இறைவன் எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். பொதுவாக எல்லோருக்கும் இரு கண்களே உண்டு. ஆனால் இறைவனின் மூன்றாவது கண் சம்பந்தருக்கு வியப்பைத்தருகிறது. வெண்ணீறணிந்த நெற்றியின் நடுவே அமைந்த அந்தக் கண் இறைவனுடைய சிறப்பான அம்சமாக உள்ளது. கால்களிலே கழல் பேறொலி செய்கிறது. பக்தர்கள் அந்தக் கோலத்தைக் கண்டு பரவசமாகப் பாடி நிற்கின்றனர். பரஞ்சோதியான இறைவன் புன்னியம் தேடி மறை பாடும் அடியார்கள் ஏத்திப் பாடும் பாடல்களையும் கேட்டபடி திருநடனம் ஆடிக் கொண்டிருப்பவன். அவனுக்கு அருகில் பெண்ணின் நல்லாள் வீற்றிருக்கின்றாள். இருவரும் இனிதாய் வீற்றிருக்கும் கோலம் இல்லறத்தின் மாண்பைக் காட்டுகிறது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

திருநடனம் ஆடுகின்ற தோற்றம் விட்டுப் புகலியூரிலே பெண்களிலே சிறந்த தேவியுடன் இறைவன் வீற்றிருக்கும் திருக்காட்சி சம்பந்தருக்கு இல்லறத்தின் ஏற்றத்தையே காட்டுகின்றது. தேவியின் உருவை அவர் வர்ணிக்கவில்லை. "பெண்ணின் நல்லாள்" என்று குறிப்பிடுகிறார். இறைவியின் தோற்றம் அவரால்.வர்ணித்துப் பாடமுடியாத அற்புதத் தோற்றமாகவுள்ளது. பெண்மையின் மாட்சியை அவரால் திருவுருவ நிலையில் காண முடியவில்லை. தாய்மையின் பண்பான அக்கோலத்தை எம்மைக் கற்பனை செய்ய விட்டுள்ளார்.

"கண்ணுதலானும் வெண்ணீற்றினானும் கழலார்க்கவே
பண்ணிசை பாட நின்றாடி னானும் பரஞ்சோதியும்
புண்ணிய நான் மறையோர்களேத்தும் புகலிநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் வீற்றிருந்த பெருமானன்றே."

# வட மாகாண தமிழ்மொழித் தின போட்டி முடிவுகள் வெளியாகின

(திருகோணமலை)

**வடமாகாண தமிழ்த்தினப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளது. இதில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் தேசிய நிலைப் போட்டிகளில் பங்குபற்றுதல் வேண்டும் எனவும் நாட்டுக்கூத்துப் போட்டி முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாகவும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,**

**வாசிப்பு**

முதலாம் பிரிவு–சு.பவித்திரா (வ/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), மா. பிரியந்தினி (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), ஜெ. நிஷோபா (யா/ கரவெட்டி மாணிக் கவாசகர் வித்தி.

இரண்டாம் பிரிவு–த. நேகாசினி (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), வி. கோபிகா (யா/ கெருடாவில் இ.த.க.பா.), ம.மேகலா (வ/ சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

முதலாம் பிரிவு–கு. நிதுஷா ( யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி). தே. புருஷோத்தமன் (வ/ புதுக்குளம் ம.வி.), யோ. அய்கல் எனன்சி (மன்/பொன்தீவுக்டல் றோ. க.த.க.பா).

**ஆக்கம் எழுத்து**

முதலாம் பிரிவு–சு. சுபநிலா (யா/ புனித ஜோன் பொஸ்கோ.), வி. யதுர்ஷனா (மு/ செம்மலை ம.வி.), வி. தர்சணா (கிளி/ஜெயபுரம் ம.வி.)

**கட்டுரை வரைதல்**

இரண்டாம் பிரிவு–ப.கதிர்தர்சினி (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), மு. சுலக்சனா (கிளி/ வட்டக்கச்சி ம.வி.), மா. பிரசாந் – (மு. உடுப்புக்குளம் த.வி)

மூன்றாம் பிரிவு–இ. நித்தியா (கிளி/ நாகேந்திரா வித்தி.), ப. விஜிதா (யா/ தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தி, ப. தனோசிகா (மு/ விக்னேஸ்வரா வித்தி.

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

4ஆம் பிரிவு –மு.தர்ஷனா (யா/மகாஜனா கல்லூரி),மு.சிவாஜினி (மன்/உயிலங்குளம் றோ.க.த.க.பா.), இ.சப்னா (வ/அல்இக்பால் வித்தி.)

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

5ஆம் பிரிவு–இரா. முகாஷினி (மன்/ தலைமன்னார் பியர் அ.த.க.பா),த. றொயிஸ்ரன் மனோஜ் (வ/பூவரசன்குளம் ம.வித்தி.), கு.குணதீபன்(யா/ இந்துக்கல்லூரி)

**இலக்கணப்போட்டி**

நான்காம் பிரிவு–சு.அனுஷா (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), கு.கஜவதனி (மு/ அம்பலவன் பொக்கணை த.வி), யோ. செசிலியா மேபிள் (கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி)

ஐந்தாம் பிரிவு–ப.தயாளினி (வ/புதுக்குளம் ம.வித்தி), ச.நிரோஷா (யா/அருணோதயாக் கல்லூரி) ,அ.பபியோலா(மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி.)

**திறனாய்வுப் போட்டி**

ஐந்தாம் பிரிவு–பு.ஜீவனா (யா/விக்னேஸ்வரா கல்லூரி ), ந.பவித்திரா (கிளி/புனித திரேஸா பெண்கள் கல்லூரி), கு.கிருஷாந் (மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி)

**குறுநாடக ஆக்கம்**

நான்காம் பிரிவு–வி.லதாங்கி( கிளி/ வட்டக்கச்சி ம.வி.),ச.சபேசன் (யா/அருணோதயாக் கல்லூரி) ,பி.பிரசனா (வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி)

ஐந்தாம் பிரிவு– க.ஜயந்தினி (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) து.மேரி மரிஸ்ரெலா (மன்/புனித ஆனாள் ம.ம.வித்தி), சி. உமாநந்தினி (வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**கவிதை ஆக்கம்**

நான்காம்பிரிவு–க.பிரசாந்(யா/ஹாட்லிக் கல்லூரி), ஞா.ஞானசுபாஷினி( வ/விபுலானந்தாக் கல்லூரி), அ. டீனுஜான்சி (மு/ உடையார்கட்டு ம.வித்தி.

ஐந்தாம் பிரிவு–வே. சுதன் (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) , ஜெ.சர்மிளா (யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஜெ. ஜெயதீபன் (கிளி/கிளிநொச்சி ம.வி.)

**சிறுகதையாக்கம்**

நான்காம்பிரிவு– ஏ. கஜானனி (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வீ.சர்மிளா (மு/வள்ளிபுனம் கனிஸ்ட உ.க.வித்தி), இ.கம்ஷாளினி (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி)

ஐந்தாம்பிரிவு–பி.சரண்யா (வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.) , கு.தர்மேந்திரன் (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்தி.), ந.நிரோஷிகா (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.)

**பேச்சு**

முதலாம்பிரிவு–த.அபிவர்ணா(யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), த.ஜினோசன் (வ/புதுக்குளம் ம.வி.), சி.ஜெகப்பிரியன் (மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி)

இரண்டாம் பிரிவு–ம.தரணியா(யா/ மகாஜனாக் கல்லூரி),யோ. ஆன்சாளினி (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), கே. சுதர்ச–(வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி.)

மூன்றாம் பிரிவு–வி.விஜிதா ( வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.), சி. யதார்த்தனி (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),ஜெ.மதூஷிகன் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி)

நான்காம்பிரிவு–சி.பவித்திரா (யா/ மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.),ம.பிரியங்கா கிரிஷாந்தி (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),பு.ஆன் டினுஷா (வ/ இறம்பைக் குளம் மகளிர் ம.வி.),

ஐந்தாம் பிரிவு–க.லோஜனா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),சு.தரணியா ( வ/பூவரசன்குளம் ம.வி.), ஞா. மரியசீலன் (மன்/ முருங்கன் ம.வி.)

**பாவோதல்**

முதலாம் பிரிவு –சி.விசாகி ( வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி) ,வி.வத்சாங்கிதன் (யா/ யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை), றெ. ஸ்ரெபானி குலாஸ் –(மன்/ சென்மேரிஸ் பெண்கள் கல்லூரி).

இரண்டாம் பிரிவு–சி.சபார்தினி ( யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),பு.சாமினி (வ/கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பா), ஆ.கிருஷாமேரி – (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

மூன்றாம் பிரிவு–ப. சாயகி (வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.), மி.சாமந்தி (யா/ நெல்லியடி ம.ம.வி.), அ.அஸ்வினி (மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி).

நான்காம் பிரிவு –சு.தசாங்கன் (யா/ யூனியன் கல்லூரி), வி. நியோசினி (வ/ தரணிக்குளம் ம.வி.),அ.அன்ரனி(மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை).

ஐந்தாம் பிரிவு–ச.கஸ்தூரி(மன். சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி),க.சோபனா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),சே. மதுரிக்கா(வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

**இசையும் அசைவும்**

1ஆம் பிரிவு –க.டயந்தினி (வ/ கல்மடு ம.வி.),யோ.கிஷானி (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), கோ. சிவகலை(யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தி.)

**இசை தனி**

இரண்டாம் பிரிவு– ரி.வருணியா (யா/ இந்து மகளிர் கல்லூரி), ந.சிபிஷா ( வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.), செ.எல்ஷியாமா குரூஸ்(மன்/சென்மேரீஸ் பெண்கள் பாடசாலை).

மூன்றாம்பிரிவு – ஜெ.லிதர்சினி(வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.), அ.சண்முகப்பிரியன்(யா/யூனியன் கல்லூரி), ஜெ.எமரேஞ்சியா லெம்பேட் (மன்/புனித ஆனாள் ம.ம. வித்தி.) .

நான்காம்பிரிவு – ச.ரவிகரன் (யா /வட்டு இந்துக்கல் லூரி), யே.யே.யூ.நிறோகினி (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), ஞா.வசந் (வ/வவுனியா தமிழ் மத்தியா மகா வித்தி.)

**இசை தனி**

ஐந்தாம்பிரிவு–ச.சுரசாகித்தியன்(யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி),சா.மதுசூதனா(வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.), கி.துவாரகன்( மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை)

**இசை**

குழு I –யா/மத்தியகல்லூரி, வ/வவுனியா தமிழ் மத்தி ம.வி.,

குழு II – யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.

**நடனம் -தனி**

முதலாம்பிரிவு –பா.ஸதூஜன்(வ/வவுனியா தமிழ் ம.ம.வி.),கு.பவித்திரா (யா/ இந்துமகளிர்ஆரம்பப் பாடசாலை), ம.மிலானி கிருஷாந்தி (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

இரண்டாம் பிரிவு –சி.பாவனா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) வி.கம்சினி(வ/வவுனியா தமிழ் ம.ம.வி.), ச.நர்மதா(மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி)

மூன்றாம் பிரிவு – பா.யஸ்திகா (யா/ இராமநாதன் கல்லூரி) செ.கஸ்தூரி (வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி.). அ.தனுஷன் (மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி).

நான்காம்பிரிவு – ஜெ.பிரியவதனி ( யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தே. தஜந்தினி ( வ/வவுனியா தமிழ்.ம.ம.வி.), ப.தனுஷியா (மன்/ சித்திவிநாயகர் வித்தி

ஐந்தாம்பிரிவு –சி.சிவதாரணி (யா/ இராமநாதன் கல்லூரி),சி.சிவசாந்தன் (வ/வவுனியா தமிழ் ம.ம.வி) ,பொ.றீற்றா நிரேசா (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

**நடனம்**

குழு I–யா/மத்தியகல்லூரி,வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி, மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.

**நாட்டிய நாடகம் (திறந்தபோட்டி)**

குழு II – வ/தமிழ் மத்திய ம.வி., யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**நாடகம் (திறந்த போட்டி)**

யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,மன் / புனித ஆனாள் மத்தி ம.வி.,வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி.

**வில்லுப்பாட்டு (திறந்தபோட்டி)**

வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி, மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, யா/ யூனியன் கல்லூரி.

**விவாதம் (திறந்தபோட்டி)**

யா/மத்திய கல்லூரி, வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி.

**தமிழறிவு வினாவிடைப்போட்டி (திறந்தபோட்டி)**


யா/விக்னேஸ்வராக் கல்லூரி, வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி., மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி.

**முஸ்லிம் நிகழ்ச்சி (திறந்தபோட்டி)**

வ/மதீனா வித்தி, மன்/அல் மினா ம.வி. (ஓ)

# எண்ணெய் ஆய்வில் சாதகமான விளைவுக்கு பதில் தோல்வியும் கிட்டலாம்

## அமைச்சர் டியு குணசேகர தெரிவிப்பு



மன்னார் வளைகுடா கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் எண்ணெய் அகழ்வாராய்ச்சியில் சிலவேளைகளில் நாம் தோல்வியடையலாம் எனினும் நாம் சாதகமான மனப்பாங்குடனேயே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் என்று அமைச்சர் டியு குணசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முந்தினம் கொண்டுவரப்பட்ட மன்னார் வளை குடாவில் மேற்கொள்ளப்படவுள்ள எண்ணெய் அகழ்வு தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் டியு குணசேகர மேலும் கூறியதாவது, இருநாடுகளுக்கும் இடையில் செய்யப்படும் ஒப்பந்தங்கள் மாத்திரமே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

எனினும் வளங்களின் வழங்கல் தொடர்பான இவ் ஒப்பந்தம் நாட்டிற்கு மிக முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எண்ணெய் பிரச்சினையானதுமிக முக்கியமானது. அது அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எமது நாடு எண்ணெய் அகழ்வு தொடர்பான திட்டம் 1960 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்டு மேலும் 2008 ஆம் ஆண்டிலேயே அது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. (ஓ)

# பிரதமரின் ராஜினாமாவை அடுத்து சிறப்புரிமைக் குழுவின் தலைவராக ஜனாதிபதியின் சகோதரர் சமல் நியமனம்

(கொழும்பு)

சிறப்புரிமை மீறப்படுவது தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புரிமை குழுவின் தலைமை பதவியிலிருந்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இராஜினாமா செய்து கொண்டதையடுத்துபுதிய தலைவராக அமைச்சர் சமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார் என்று சாபாநாயக்கர் வி.ஜே.மு லொக்கு பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் வி.ஜே.மு லொக்கு பண்டார தலைமையில் கடந்த புதன் கிழமை காலை 9.30 மணிக்கு கூடியது. சபாநாயகரின் அறிவிப்பு நேரத்தின் போது உறுப்பினர்களால் கடந்த காலங்களில் சமர்ப்பிக்கப்பட்ட சிறப்புரிமைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று அறிவித்தார்.

சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் வாய் மூல கேள்வி நேரம் ஆரம்பிக்கப்பட்டது கேள்வி நேரத்தின் போது சபாநாயகரின் அனுமதியுடன் ரவி கருணாநாயக்க எம்.பி கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக எழுந்த ரவி கரு ணாநாயக்க எம்.பி சிறப்புரி மை குழுவிற்கு சமர்ப்பிக் கப்பட் டுள்ள முறைப் பாடுகளின்விசாரணைக்கு என்ன நடந்துள்ளது என்று கேள்வி எழுப்பினார். சிறப்புரிமைக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க ராஜினாமாச் செய்து கொண்டதன் பின்னர் அதற்கு தலைவராக அமைச்சர் சமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் சபாநாயகர் பதிலளித்தார்.



இதனிடையே எழுந்த ஐ.தே.கவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, பாராளுமன்ற நிர்வாகமும் சகோதர நிறுவனத்திடம் வழங் கப்பட்டு விட்டதா என்று கேள்வி எழுப்பியதை அடுத்து சபையில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

உறுப்பினர்ஒருவர் தலைமைவகிப்பதற்கு முடியும் என்பதால் அப்படியெல்லாம் சொல்லக்கூடாது என்று சபாநாயகர் உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கினார். (அ–6)

# வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் யாழ்.மாவட்டம் சம்பியன்

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ். மாவட்டம் 527 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனானது.

வவுனியா மாவட்டம் 409 புள்ளிக்ளைப் பெற்று 2 ஆம் இடத்தையும் மன்னார் மாவட்டம் 270 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

வவுனியாவில் நடைபெற்று வந்த வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான

**19 வயதுக்குட்பட்ட ஆண்கள்**

**400 மீற்றர் ஓட்டம்**

இ.விநோத் (மன்.சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தி, எஸ்.தமிழ்ச்செல்வன் (வவு.நெடுக்குளம் கலைமகள் மகா வித்தி.), பி.குருபரன் (யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி),

**5 ஆயிரம் மீற்றர் ஓட்டம்**

பி.சதானந்தா (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), எஸ்.திலீப்குமார் (யாழ்.ஞானசாரியார் கல்லூரி), ஆர்.ஸ்ராலின்(யாழ்.பண்ணாகம் மகா வித்தி.),

**110 மீற்றர் சட்டவேலி பாய்தல்**

எஸ்.ஜபாகர் (யாழ்.தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ஜி.சுதர்ஷன் (மன்.சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை), ஏ.அகிலன் (யாழ்.இந்துக் கல்லூரி),

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

வவு.நெடுக்குளம் கலைமகள் மத்திய மகா வித்தி., யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி. மன்.முருங்கன் மகா வித்தி.

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

வவு.நெடுக்குளம் கலைமகள் மகா வித்தி, யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மன்.முருங்கன் மகா.வித்தி.

**தடி ஊன்றிப் பாய்தல்**

என்.திலீபன் (மன்.பற்றிமா மகா் வித்தி.), வி.கரிஹரன் (யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), என். சுதாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி),

**21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு**

**400 மீற்றர் ஓட்டம்**

என்.கபாஸ்கரன் (வவு.தமிழ் மத்திய மகா வித்தி.), ஸ்ரான்லி மீட்டர் லம்பேட் (மன்.சென்.ஆன்ஸ் மகா வித்தி.), ஏ.பாலகுமார் (யாழ்.சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி),

**5 ஆயிரம் மீற்றர் ஓட்டம்**

பி.பிரதீபன் (யாழ்.அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), ஆர்.முகுந்தன் (யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), கே. வசந்தராஜா (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.),

**110 மீற்றர் சட்டவேலி பாய்தல்**

பி.தர்ஷன் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), சி.சிவதாஸ் (யாழ்.சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி), எஸ்.ரஜீவன் (வவு.நெடுக்குளம் கலைமகள் மகா வித்தி.),

**தடி ஊன்றிப் பாய்தல்**

கே.காண்டீபன் (யாழ்.அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), கே.துஷிகரன் (யாழ்.

விளையாட்டுப் போட்டிகள் நேற்றுடன் முடிபடைந்தன. இதில் அதிசிறந்த வீர வீராங்கனைகளுக்கான விருதுகளை பின்வருவோர் பெற்றுக் கொண்டனர்.

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில், இ.விநோத் (மன்.சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தி.), 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில், எஸ்.கலைவாணி (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),எஸ்.கீர்த்திகா (யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), எஸ்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), ஸ்ரான்லி சூசை (மன்.சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தி.),

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

யாழ்.சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, யாழ்.இளவாலை சென்.கென்றியரசர் கல்லூரி, மன்.முருங்கன் மகா வித்தி.,

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

வவு.தமிழ் மத்திய மகா வித்தி., யாழ்.சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, யாழ்.இளவாலை சென்.கென்றியரசர் கல்லூரி,

**19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு**

**100 மீற்றர் ஓட்டம்**

எஸ்.கலைவாணி (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எஸ்.றேகலா (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), பி.அமுதினி (வவு.அல் இக்பால் மத்திய மகா வித்தி.),

**200 மீற்றர் ஓட்டம்**

எஸ்.றேகலா (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), எஸ்.உதயா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),பி.கல்பனா (வவு.செட்டிக்குளம் மகா வித்தி.),

**400 மீற்றர் ஓட்டம்**

பி.பிரதீபா (யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), எஸ்.உதயா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),

**800 மீற்றர் ஓட்டம்**

பி.கல்பனா (வவு.செட்டிக்குளம் மகா வித்தி.),எஸ்.திருமகள் (யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),

**ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டம்**

எஸ்.திருமகள் (யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),எஸ்.வசந்தினி (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), வி.என்.ஜெனோ (மன்.சென்.ஆன்ஸ் பெண்கள் பாடசாலை),

**3 ஆயிரம் மீற்றர் ஓட்டம்**

எஸ்.திருமகள் (யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஏ.ஜசிந்தா (யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), எஸ்.துஷாந்தினி (வவு.புதுக்குளம் மத்திய மகா வித்தி.),

**100 மீற்றர் சட்டவேலி பாய்தல்**

எஸ்.உதயா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),ஏ.தர்ஷினி (வவு.இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தி.), எஸ்.கமல்த்தா சூசை (மன்.சென்.ஆன்ஸ் மகா வித்தி.),

**உயரம் பாய்தல்**

கவிதா விமலநாதன் (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),எஸ்.கீர்த்திகா (யாழ்.தெல்

திருமகள் (யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) ஆகிய மூன்று வீராங்கனைகளும் இணையாகப் பெற்றனர்.

21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில், என்.கபாஸ்கரன் (வவு.தமிழ் மத்திய மகா வித்தி.), 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில், ஆர்.நிறைஞ்சனா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ரி.அனுசா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) ஆகிய இரண்டு வீராங்கனைகளும் இணையாகப் பெற்றுக்

லிப்பழை மகாஜனாக் கல்லூரி), எஸ்.மேரி ஜெனீற்றா (மன்.சென்.சேவியர் மகளிர் பாடசாலை),

**நீளம் பாய்தல்**

எஸ்.கலைவாணி (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எஸ்.றேகலா (வவு.ஸ்கந்தபுரம் ஆர்.ரி.ரி.எம்.எஸ்.), வி.கஜித்தா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),

**முப்பாய்ச்சல்**

வி.சுஜித்தா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.கலைவாணி (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ரி.சங்கீதா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),

**குண்டெறிதல்**

எஸ்.கீர்த்திகா (யாழ்.தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி),வி.மஜாலின் (மன்.முருங்கன் மகா வித்தி.), யூ.பவித்திரா (வவு.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.),

**தட்டெறிதல்**

எஸ்.கீர்த்திகா (யாழ்.தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ரி.பிரசாந்தினி (வவு.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.), சி.றிக்ஸி குரூ (மன்.தலைமன்னார் ரி.ரி.எம்.எஸ்.)

**ஈட்டி எறிதல்**

என்.துஷாந்தினி (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),ஜே.புஷ்பாதேவி (வவு.புதுக்குளம் மகா வித்தி.),

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

வவு. சைப்பிரகாச மகளிர் கல்லூரி, வவு. இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.,

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வவு.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி., மன்.சென்.சேவியர் மகளிர் கல்லூரி,

**21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு**

**100 மீற்றர் ஓட்டம்**

ஆர்.நிறைஞ்சனா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எல்.நிறைஞ்சலா (மன்.முருங்கன் மகா வித்தி.), எம்.தமிழ்ச்செல்வி (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.),

**200 மீற்றர் ஓட்டம்**

ஆர்.நிறைஞ்சனா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எல்.நிறைஞ்சலா (மன்.முருங்கன் மகா வித்தி.), எம்.தமிழ்ச்செல்வி (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி),

**400 மீற்றர் ஓட்டம்**

ஆர்.நிறைஞ்சனா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எம்.தமிழ்ச்செல்வி (வவு.

கொண்டனர்.

இதேவேளை இம் முறை வெற்றி பெற்றவர்களுக்கான சம்பியன்களும் சான்றிதழ்களும் போட்டிகள் நிறைவடைந்தவுடனேயே வழங்கப்பட்டதாக வட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.சத்தியபாலன் தெரிவித்தார்.

19 மற்றும் 21 வயது ஆண்கள், பெண்களுக்கான நேற்று நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரம் வருமாறு,

ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), எஸ்.யாழினி (யாழ்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி).

**800 மீற்றர் ஓட்டம்**

எஸ்.யாழினி (யாழ்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), பி.செபமலர் (வவு.ஸ்கந்தபுரம் ஆர்.ரி.ரி.எம்.எஸ்.), பி.அனித்தா (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.),

**ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டம்**

பி.அனித்தா (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), எஸ்.ரஜீவா (யாழ்.வசாவிளான் மத்திய மகா வித்தி.), எம்.சுபாஜினி (வவு.புதுக்குளம் மத்திய மகா வித்தி.),

**3 ஆயிரம் மீற்றர் ஓட்டம்**

பி.அனித்தா (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), எஸ்.ரஜீவா (யாழ்.வசாவிளான் மத்திய மகா வித்தி.), எம்.சுபாசினி (வவு.புதுக்குளம் மத்திய மகா வித்தி.),

**400 மீற்றர் சட்டவேலி பாய்தல்**

தி.செபமலர் (வவு.ஸ்கந்தபுரம் வாணி வித்தி.), ஜி.கீர்த்திகா (யாழ்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), ரி.நித்தியா (கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.),

**உயரம் பாய்தல்**

எஸ்.நர்மிகா. (வவு.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.), ஜி.கீர்த்திகா (யாழ்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி),

**நீளம் பாய்தல்**

ஜி.நிலானி (யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஆர்.விக்னேஸ்வரி (வவு.புதுக்குளம் மகா வித்தி.),

**குண்டெறிதல்**

ரி.அனுசா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ரி.வித்தியா (யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தி.), இ.நயாணி (வவு.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.),

**ஈட்டி எறிதல்**

ரி.அனுசா (வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ஜி.புஷ்பாந்தி (யாழ்.தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ரி.நயாணி (வவு.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.),

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, யாழ்.வசாவிளான் மத்திய மகா வித்தி., மன்னார் முருங்கன் மகா வித்தி.,

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, யாழ்.வசாவிளான் மத்திய மகா வித்தி., மன்னார் முருங்கன் மகா வித்தி. (ச-5)

# யாழ்ப்பாணக் கல்லூரியின் பாரதி விழாவுக்கு வயது 26

1982 இல் மகா கவிஞன் பாரதியின் நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்துடன் தொடங்கப் பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி பாரதி விழாவுக்கு இன்று வயது 26.

கடந்த 2007 செப்ரெம்பரில் 25-வது

**யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ்மன்றத்தின் பாரதி விழா இன்று கொண்டாடப்படுகின்றது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை வெளியாகின்றது.**

ஆண்டு வெள்ளி விழா நிறைவு கண்ட யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ்மன்ற பாரதி விழாவை தொடக்கி வைத்த மூலவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் சு. ஜெபநேசன் ஆவார்.

பாரதி பிறந்த தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகள், கல்லூரிகளிலே கூட தொடர்ச்சியாகவும் துல்லியமான ஈடுபாட்டுணர்வுடனும் யாழ்ப்பாணக் கல்லூரி எடுக்கும் பாரதி விழாக்கள் போன்று எடுக்கப்படுவதேயில்லை என்று இங்கு வந்து சென்ற தமிழகக் கலை, இலக்கியவாதிகளே வியந்துபோற்றியுள்ளனர்.

முழு இலங்கையிலேயும் கூட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மட்டுமே 25 ஆண்டுகளுக்கு மேலாக மகா கவிஞன் பாரதி விழாவை தொடர்ந்து நடத்தி வருவது மிகவும் பெருமைக்குரிய சாதனையாகும்.

இம்முறையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ்மன்றத்தின் பாரதி விழா-2008 உணர்வு பூர்வமாக இடம்பெறவுள்ளது.

இம்முறை ஒரு புதுத் தொடக்க நிகழ்வாக நேற்று வியாழக்கிழமை காலை 8மணியளவில் நல்லூரின் வைமன் வீதியும் பருத்தித்துறை வீதியும் கந்தர்மட வீதியும் சங்கமிக்கும் முச்சந்தியில் நிறுவப்பட்டுள்ள மகா கவிஞன்



பாரதி சிலைக்கு முன்னாள் பேராயர் முனைவர் சு.ஜெபநேசன் அடிகள் மாலை சூட்டி மரியாதை செய்தார். - ஜெ.கி.ஜெயசீலன் -

## பரிசுத் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பரிசுத் தின விழா நாளை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

## உயிர் அச்சுறுத்தலால் வயோதிபர் சரண்

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று வயோதிபர் ஒருவர் சரணடைந்துள்ளார்.

கச்சாய்வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த 51 வயதுடைய வயோதிபரே இவ்வாறு சரணடைந்துள்ளார்.

இவ் வயோதிபர் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தமிழ் மக்களை கைவிட்டுச்...

இது தொடர்பில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலங்கையில் தமிழர்களின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்தில் சிங்கள அரசினால் கட்டவிழ்க்கப்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணப் பணி செய்து வந்த அனைத்து உலகதொண்டுநிறுவனங்களைவன்னிப் பகுதியிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு சிங்கள அரசு கட்டளை விடுத்துள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வன்னிப் பகுதியில் கண்ணிவெடி அகற்றல், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் இழந்த வீடுகளைக் கட்டிக்கொடுத்தல், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் குழந்தைககளுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளல் போன்றவற்றையே செய்து வந்தன.

அன்றி எந்தத் தொழிற்சாலைகளையும் கட்டி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவில்லை. இந்த தொண்டு நிறுவனங்கள் வன்னிப் பகுதிக்குள் மனிதாபிமான பணிகளை மேற்கொள்ள அரசாங்கத்திடம் மட்டுமன்றி விடுதலைப் புலிகள் அமைப்பிடமும் அதாவது முரண்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினர்களிடமும்அனுமதியைப் பெற்றே பணியாற்றின.

ஒரு தரப்பு அவர்களை மீள அழைக்கும் போது மறுதரப்பின் அனுமதியையும் விருப்பத்தையும் கேட்க வேண்டிய பொறுப்பு தொண்டு நிறுவனங்களுக்கு உண்டு.

ஒரு பொறுப்பை எடுத்து குறித்த ஒப்பந்தத்துடன் வந்துவிட்டு இடை நடுவில் தமிழ் மக்களை கைவிட்டுச் சென்றால் அதனை ஒரு பொறுப்பற்ற செயலாகவே கருதவேண்டும்.

இந்த நேரத்திலாவது சிங்கள இனவாதிகளின் இன அழிப்புக் குரூரத்தை அனைத்துலக சமூகம் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு புறம் இன அழிப்பும் இன்னொரு புறம் மனிதாபிமானப் பணிகளும் ஒருங்கே நடைபெற முடியாதென்பதை விளங்கிக் கொண்டு உடனடியாக இராணுவத்தைத் தமிழ் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தி தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

V4 Educational Consultancy (Pvt) Ltd.
Admission 2008 - Sona College of Engineering
கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும்
எமது பிரதிநிதியினால்
13-09-2008 தொடக்கம் 20-09-2008 வரை
உடனடி அனுமதிகள் (Spot Admission) எமது
யாழ் அலுவலகத்தில் நேரடியாக வழங்கப்படுகிறது.
Eligiblity
A/L 3 Pass or Pending Results
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை
இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்
மேலதிக தொடர்புகளுக்கு
0773867257 (Jeyakanth)
0774366711
0775936343 (Elankeethan)
0212228374
Educational Consultancy
இல: 274, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி
யாழ்ப்பாணம்

## வன்னி மக்...

சபையின் பொதுச் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிய கடிதம் ஆகியன நெதர்லாந்து மொழியில் அச்சிடப்பட்டு நெதர்லாந்து வாழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. 'அனைத்துலக சமூகமே ஏன் இன்னும் மௌனமாய் இருக்கிறாய்?' 'எம்தமிழ் உறவுகளைக் காப்பாற்ற குரல் கொடு' போன்ற வாசகத்தோடு எம் உடன்பிறப்புக்கள் தாயகத்தில் படும் அவலங்களையும், சொல்லொணாத் துயரங்களையும் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ச-5)

## யுத்தம் நடைபெறும்...

யாப்பா தெரிவித்தார்.

வன்னியிலிருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்களை வெளியேறுமாறு கோரப்பட்டமை தற்காலிக ஏற்பாடாகும். அப்பிரதேசத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியதன் பின்னர் பணிகளை மேற்கொள்வதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு இடமளிக்கப்படுமென்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் செய்தியாளர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியர் இருவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் படையினரா? இல்லையா? என்பது தொடர்பில் எதுவுமே தெரியாது எனினும் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். ஒப்பந்தம் முடிபடைந்தவுடன் இந்தியாவுக்குச் சென்று விடுவார்கள். சாதாரண நிறுவனமொன்றில் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படுகின்ற போது அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் பயிற்சி அளிப்பார்கள்.

அதேபோலவே ராடர்கருவியை இந்தியா வழங்கியபோது அவர்கள் வருகை தந்துள்ளனர் என்றார். (ச-5)

## புலிகளின் விமானத்...

காப்பை அவதானிப்பதில் இலங்கை விமானப் படையின் நிபுணர்குழு வொன்று சிறப்பாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வவுனியாவில் உள்ள பிரதான கட்டளையிடும் இரா ணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்டிலறி எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களையடுத்து கொழும்பின் வான் மார்க்கமான எல்லைப் பாதுகாப்பு அவதானிப்புக்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள ராடர் கருவிகள் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருவதாக படைத்தரப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற புலிகளின் தாக்குதலில் அவை சேதமடைந்ததால் தலை நகர் கொழும்பின் வான் மார்க்கமான எல்லைப் பாதுகாப்பு கண்காணிப்பு விடயத்தில் சிக்கல் நிலை ஏற்பட்டுள் ளதாக கூறப்படுகிறது. (ச-5)

## மொனராகலை ...

சோதனை நடவடிக்கைகளின் போது குறித்த இரு சடலங்கள் உட்பட ஏழு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாரால் மீட்கப்பட்ட இச் சடலங்கள் மொனராகலை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் சம்பவம் குறித்து மொனரா கலை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## கரும்புலி...

மீது செவ்வாயன்று நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 10 கரும்புலிகளின் சடலங்களும் வெலிஓயா களமுனைகளில் கடந்த சில தினங்களில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் கொல்லப்பட்ட 4 விடுதலைப் புலிகளின் சடலங்களுமே இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ரு)

NEW MICRO
COMPUTER SYSTEMS
COMPUTER EDUCATION
கொம்பியூட்டர் கற்கை நெறிகளுக்கான
சலுகைக்கட்டண திட்டம்
இத்திட்டத்தின் கீழ் இணைந்து அவர்கள் தெரிவுசெய்யும் கற்கைநெறிகளுக்கு அமைய
50% - 80% வரையிலான சலுகை கட்டணத்தை செலுத்தி எமது நிறுவனத்தில் இணைந்து பயனடையுங்கள்.
NEW MICRO COMPUTER SYSTEMS இன் அங்கீகரிக்கப்பட்ட diploma
சான்றிதழ்களை விசேட கற்கை நெறிகளுக்கு சலுகை கட்டணம் வழங்குகின்றது
அனைத்து கற்கை நெறிகளும்
100% செய்முறை & onling classes
Batch I 12/09/2008
Batch II 13/09/2008
Batch III 15/09/2008
சங்கானையில்......!
A/L பரீட்சை முடிந்து விட்டதா?
New Micro Cmputer Systems
SPECIAL OFFER ALL COURSE
Computer Courses:
@ Dip in Micro soft office
@ Dip in Disk top Publishing
@ Dip in Computer Software Engineering
@ Dip in Computer Hardware Engineering
@ Dip in Video Editing
@ Dip in Computer Accounting
@ Dip in Internet & E-mail
MAIN STREET, CHANKANAI.
NEW MICRO COMPUTER SYSTEMS
MAIN STREET, CHANKANAI.
நியூ மைக்ரோ கம்பியூட்டர் சிஸ்டம்.
பிரதான வீதி,
சங்கானை.
T.P:021-4590042
0602210727

Jaffna College
இதோ
யாழ் மாணவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
ஆற்றலுக்கேற்ப குழுக்கள் தெரிவுசெய்யப்படும்
வகுப்புக்கள் வார மற்றும் வார இறுதி நாட்களில் இடம்பெறும்
Certificate Course in English
Areas Focused
UNIT 1 :- Basic English Grammar Skills for Communication( 30Hours)
UNIT-2:- Speaking Skills ( 20Hours)
UNIT 3:- General and academic reading skills (20 Hours)
UNIT 4:- Writing skills (30 Hours)
UNIT 5:- Listening Skills (15Hours)
UNIT 6:- Introduction to English literature (15 Hours)
Duration:-6 months
Certificate :- Certificate will be awarded by Jaffna College on passing the final examination in all the units
Target Group
School leavers
Govt, non Govt employees
University Student & other students of tertiary education
JAFFNA COLLEGE CEYLON
Director
Jaffna College Undergraduate Dept
464 , Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை விநாயகமூர்த்தி

வட்டு.வடக்கு சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை விநாயகமூர்த்தி 11.09.2008 (நேற்று) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், மகிழ்மணியின் சகோதரனும் ஆறுமுகநாதன், கதிர்காமநாதன், தங்கேஸ்வரன், சரோஜினிதேவி, பாக்கியலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும்,

தங்கவேலாயுதம், சுந்தரலிங்கம், புஸ்பராணி, மஞ்சுளா தேவி, இராசகுமாரி ஆகியோரின் சகலனும்,

முத்துலெட்சுமி மணிவண்ணன், சாந்தி, செல்வரஞ்சன், விக்னேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாலிங்கம், சற்குணராசா, கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்பு மாமனும் ரமணனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.09.2008) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு. வடக்கு,
சித்தன்கேணி.

(C-1535)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



கலாபூஷணம்,நாதசுர வித்துவான்

### வி.கே.கானமூர்த்தி

கோண்டாவில் மேற்கு, காளிகோயிலடியைச் சேர்ந்த நாதசுர வித்துவான் வி.கே. கானமூர்த்தி நேற்று முன்தினம் (10.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(C-1526)

தகவல்
கலாபூஷணம்
கே. ஆர். சுந்தரமூர்த்தி
(மைத்துனர்)

## துயர் பகிர்கின்றோம்



எமது சக மாணவனாகிய
**அலெக்ஸ் இம்மானுவேல்**
**தேவராஜன் லெம்பட் (ராஜன்)**
*(மூன்றாம் வருட முகாமைத்துவதுறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

அவர்கள் நேற்று வியாழக்கிழமை (11.09.2008) அன்று அகால மரணம் அடைந்தார். எமது நண்பனின் ஆத்மா இறைவனின் திருவடிகளில் ஆறுதல் அடைந்து நித்திய வாழ்வு கிடைக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள்,நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக சக மாணவர்கள்

(1666)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.